மகாவீரரின் நற்சிந்தனைகள்

எஸ். குலசேகரன்



அமிழ்தம் பதிப்பகம்

மகாவீரரின்
நற்சிந்தனைகள்

எஸ். குலசேகரன்

அமிழ்தம் பதிப்பகம்
நார்த்தாம் பூண்டி,
திருவண்ணமலை வட்டம் (வ.ஆ.)
606809.

மதிப்புரை

கி. மு. ஆரும் நூற்றுண்டில் வாழ்ந்த மகான் மாகவீரர் பற்றிய நூல் இது. புத்தர், இயேசு, முகம்மது, நானக் போன்ற மகான்களின் போதனைகளைப் போன்று மகாவீரரின் சிந்தனைகள் மனித குலத்துள் நிலைத்து நிற்பவை.

உலக மொழிகள் எதற்குள்ளும் இவரது சிந்தனைகள் இடம் பெறும் வலிமை உள்ளவை.

பெரியவர்கள் ஆகிவிட்ட பின்னர் சில பண்புகளைப் படிக்கலாம்—பழக்கப்படுத்த முடியாது. அன்பு – கருணை — காருண்யம்— ஈகை — நன்றி —ஊக்கமுடைமை – இவை பற்றி படிக்கலாம். பயிற்சியும் படிப்பும் மனப்பழக்கம் ஆவது கடினம்.

பருவத்தில் பயிர்செய்தால், கருவத்துடன் கழனி சென்று அறுவடை செய்யலாம். பஞ்சவர்ணக்கிளியைப் பார்த்து இருப்பீர்கள். அதன் கழுத்தில் வானவில்லே ஆரமாக விழுந்த மாதிரி அழகு மின்னலடிக்கும். அந்தக் கிளி பேசினுல் தேனுக தித்திக்கும். வயதான கிளிக்குப் பாடம் சொல்லிக் கொடுத்தால் பேசுமா?

கிளி குஞ்சாக இருக்கின்ற காலத்தில் அதன் கழுத்தில் பஞ்சவர்ண ஆரம் சுவடு பதிக்கும் ஆரம்ப காலத்தில் பேச்சு சொல்லி வைக்க வேண்டும்.

கிளியின் மழலை இனிமை. நாள் ஆக ஆக கிளி வளர வளர சொல் சுத்தமாக இனிமையுடன் நாதம் மலரும். கிளி பேச வேண்டு

மானுல் அது பயிற்றத் தொடங்கும் பருவம் வெகு முக்கியம்.

மகாவீரரின் சீரிய சிந்தனைகளைச் சிறிய பிராயத்து மாணவர்கள் கற்கத தொடங்க வேண்டும். அதன்படி நிற்கவும் மனம் இடம் கொடுக்கும்.

நமது தமிழ்மொழியில் இலக்கண இலக்கிய காவிய நீதி நூல்கள் பல உள்ளன. இவற்றில் பெரும் பகுதியைச் சமண முனிவர்கள் நமக்குத் தந்தவர்கள். இந்த சமண முனிவர் களின் ஆதி குருநாதர் வர்த்தமான மகா வீரர்.

மகாவீரர் போதனைகளைத் தமிழ் நீதி நூல் களில் படிக்கலாம். காவியங்களில் ரசிக்கலாம். இந்த நூலின் ஆசிரியர் திரு எஸ் குலசேகரன் அவர்கள் மகாவீரர் தம் சிந்தனைகளைச் சிறு ஆராய்ச்சி நூலாகத் தந்துள்ளார். சமணர் தம் கொள்கைகளையும், குறிக்கோள்களையும், அவர் கள் தமிழுக்கு ஆற்றியுள்ள தொண்டுகளையும் மிகவும் நுணிகிப் பார்த்து எழுதியுள்ளார்.

தமிழில் எழுதிய சமணப் புலவர்கள் தொழுகின்ற ஆதிமுனிவர் மகாவீரரின் உள்ளத்தையும் உயரிய மனப்பாங்கையும் இங்கு தரிசிக்கிறோம்.

சமணப் பெருமக்கள் இவர்தம் ஆக்கப் பணிக்கு ஊக்கமும் உற்சாகமும் செய்வார்கள். தமிழன்பர்கள் இவர்தம் தொண்டுக்குப் பாராட்டு செய்வார்கள். இது தமிழ் கூறும் நல்லுலகத்தில் பண்பாடு!

மயிலை, சென்னை — அன்பன்,

16-5-1983 — டி. என். சுகி சுப்பிரமணியன்.

மகாவீரரின் நற்சிந்தனைகள்

முக்கனிக் கூட்டு

மகாவீரர் ஒரு மாபெரும் மனிதர். மங்கலச் செல்வர். அவர் உலகம் உய்யப் பிறந்தவர். புத்தரை விட மூத்தவர். முத்தான மூன்று கருத்துகளை இப்புவியில் வாழ்வோர் முன் முக்கனிக் கூட்டாக வைத்து நின்றவர்.

நல்லறிவும், நற்கொள்கையும், நன்னெறியுமே மோட்சத்துக்கான வழிகள் எனக் கூறியவர்.

மோட்சம் என ஒன்று இருக்கிறதா என வினவலாம் பலர். நம் வாழ்நாளில் நல்ல அறிவுடன், பிறருக்காகத் தொண்டு செய்து பிறர் பொருளை அபகரிக்க விரும்பாமல் பிறர் நலமே தம் நலம் என எண்ணுவோர் உண்மையில் சந்தன மணம் போன்ற

வர்களே! அவர்கள் கடைபிடிக்கும் நற்கொள்கைகளை அனைவரும் விரும்புவர்.

பிற உயிர்களுக்குத் தீங்கு செய்ய எண்ணாமல் இன்பங்களிலிருந்து விலகி வாழும் வாழ்வே மிகச் சிறந்த வாழ்வாம்.

வெய்யில்–மழை–பனி–காற்று என எதையும் பொருட்படுத்தாமல், இச்சையே இல்லாத மனிதராக நல்ல நெறிகளையே கடைப் பிடிப்போர் உண்மையில் உயர்ந்தவர்களே!

துன்பங்களைப் பொறுத்தல் வேண்டும்

''நாம் முந்தைய கருமத்தின்பயனை அனுபவித்த முக்தியடைய துன்பங்களைப் பொறுத்துக் கொள்ள வேண்டும்' இது மகாவீரரின் கொள்கை.

''துன்பங்களைத் தாங்கும் மனம் வேண்டும். இன்ப வாழ்க்கை தேவையில்லை. நாம் நடக்கும் பாதை எப்பொழுதும் பட்டு மெத்தை விரித்த பாதை யல்ல; முள்ளும் கல்லும் நிறைந்த காட்டுப் பாதையே! அந்தப் பாதையில் நாம் மிகவும் பொறுமையுடன், எவ்விதத் துன்பங்களையும் தாங்கி நடக்க முற்படல் வேண்டும்'' — மகாவீரர் மணிமொழிகள் இவைகள்!

மகாவீரர் மிகவும் பொறுமைசாலி. துன்பங்களைத் தாங்கும் குணம் படைத்தவர்.

உடலில் ஏற்படும் நமைச்சலுக்குச் சொறிந்தால் அதில் ஊர்கின்ற ஜீவன்கள் இறந்துவிடுமோ எனப் பேசாமல் மிகவும் பொறுமையுடன் இருப்பாராம்.

இத்தகைய மனிதர் மாபெரும் மனிதர் அல்லவா? மாணிக்கமே கிடைத்தாலும் அதைப் புறக்கணித்து — ஒதுக்கித் தள்ள இந்த மாபெரும் மனிதரின் தாள் பணிந்து தொழலாம் அல்லவா?

அவர் முக்காலமும் உணர்ந்தவர்.

உயர்ந்த ஞானம் அடையவேண்டும் என நீரும் பருகாமல், தியானத்தில் ஆழ்ந்தவர்.

அவருடைய கொள்கைகளைப் பற்றிய நினைவுகள் மக்கள் பலருக்கு மங்கலத்தையே உண்டாக்கும். மனிதர்களுள் பலர் சோம்பேறிகள் அல்லர். அவர்கள் வாழ்க்கை மந்தமுடையதுமல்ல! அவர்கள் அனை வரும் மிகவும் சுறுசுறுப்பானவர்கள். உலகில் பலர் வைகறையில் எழக்கூடியவர்கள். எழ வேண்டும் என எண்ணுபவர்கள். கதிரவன் முளைப்பதற்கு முன் கண்விழித்து — கதிரவன் மறைந்து இருள் வரும்முன் உண்ணும் பழக்கமுடைய வாழ்க்கை மிகச் சிறந்த வாழ்க்கையல்லவா? — என எண்ணுகின்றனர் மகா வீரர் வழி வந்தோர்! அதுமட்டுமல்ல — இன்னும் பல!

இரவில் செய்த பாவங்களை, தோஷங்களை ஒப்புக் கொள்ளுதல் வேண்டும். தவறுகள் நம்முடன் வரக் கூடியவைகளே!

பாவங்களை ஒப்புக்கொள்

பாவங்களை மனப்பூர்வமாக ஒப்புக்கொள்வதில் தயங்குதல் கூடாது. பாவம் செய்தது யார்? செய்த பாவத்தை ஒப்புக் கொள்வதில் போலிக் கௌரவமோ, பிடிவாதமோ ஏன் கொள்ள வேண்டும்?

பாவங்களை ஒப்புக்கொண்ட பொழுதே மனம் போல் தெளிவுடையதாக ஆகிவிடுகிறது. பாலும் வெண்மை, மனமும் வெண்மை! வெண்மைக்கு உண்டோ கள்ளமும் கபடமும்!

கள்ளங் கபடமற்று பிச்சை எடுக்கப் புறப்பட... வேண்டும். அதுவும் உயிர் வாழ்வதற்குத் தேவை யான அளவே — மிகக் குறைந்த அளவே பெற்றுக் கொள்ள வேண்டும்.

துறவிகளின் பிச்சை உணவு பத்து வயிறுகளுக் குத் தேவையில்லை. ஒரு வயிற்றுக்கு—மிகக் குறைந்த அளவே தேவையுடையதாக இருத்தல் வேண்டும்.

பிறர் கொடுக்கும் உணவை மிதமிஞ்சி உண்ணும் பழக்கம் கூடாது. அது மிகமிகத் தீமை பயக்கும். இன்று கொடுத்தது நாளை இல்லையென்றால் அது நம் மனத்திற்கு இன்பத்தையா தரும்? துன்பமாகவன்றோ தோன்றும்?

இனிப்புத் தின்பண்டம் தேவை இல்லை.

அதைப்போல பாயச பரமான்னம் (நிஷித்தம்) தேவையில்லை.

இனிப்புச் சுவைகளால் இன்பத்தை வேண்டி — விரும்பி நிற்பவர்களாவோம். இன்பச் சுவை எப் பொழுதும் ஊறு விளைவிக்கும். இன்பச் சுவையால் மெய்மறந்து ஓரிடத்திலேயே தங்க விரும்புவோம். அந்த வாழ்க்கை கூடாது.

யாத்திரை புறப்பட வேண்டும். எங்கும் சுற்றித் திரிய வேண்டும். மகாவீரர் கொள்கைகளைப் பின் பற்றுவோர் நற்செயல்கள் – நல்லறிவு – நற்கொள்கை கள் ஆகியவை அவர்களை நல்ல நெறியுடையவர் களாகத் திகழச் செய்யும்.

தித்திப்புக்காக மயங்கி நிற்போர் வெறும் தீமை களை வலிய வரவழைத்து நிற்பவர்களாகவே இருப்பர்.

அவரின் கொள்கைகளை நாடெங்கும் பரப்ப வேண்டும். வீடெங்கும் அவரின் எண்ணங்கள் மலர வேண்டும். எண்ணங்கள் மலர நல்ல தரும நூல்களை ஆராய்தல் வேண்டும் என பல சமண பெரியோர்கள் எண்ணினர்.

மிகச் சிறந்த நூல்களை ஆராயாமல் உள்ளத்தை சுகபோக வாழ்க்கைக்கு அர்ப்பணித்து — இன்பத்

திற்கும் — இனிப்பிற்கும் ஏங்கி நிற்பது மோட்ச முடைய வாழ்க்கைக்குச் செல்வதாக ஆகாது.

அந்த வாழ்க்கை செல்லரித்த வாழ்க்கையாகவே இருக்கும்.

வாழ்க்கை நன்கு அமைய தியானம் செய்ய வேண்டும். மனத்தை ஒரு நிலைப்படுத்த வேண்டும். அலைகின்ற மனம் கூடாது. அலைகின்ற மனத்துள் ஆசைகள் தோன்றும். ஆசைகள தோன்றும்பொழுது மிகவும் அற்பமான செயல்களைச் செய்ய தூண்டப் பெறுவோம்.

கண நேரம்கூட வீண்பொழுது போக்கக்கூடாது. வீண்பொழுது போக்காத வாழ்க்கையே மிகவும் உயர்ந்த வாழ்க்கையாகும்.

உயர்ந்த வாழ்க்கை எனும் பொழுது நாம் ஆற்றும் நற்பணிகளுள் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும். கண்ணும் கருத்துமற்ற செயல் மண்ணில் பெருமைதரக் கூடியதாக இராது. பெருமை தரக் கூடிய பிறர் போற்றக்கூடிய செயல்களையே செய்தல் வேண்டும்.

மக்களின் செயல்கள் சுறுசுறுப்புடையதாக பிறர் பாராட்டக் கூடியதாக, இருத்தல் வேண்டும். உண்மைக்குப் புறம்பின்றி மாறுபட்ட கருத்துக்களுடன் இருக்கக் கூடாது.

பொய்யுடைய வாழ்க்கை புறங்கூறும் வாழ்க்கை யாகும்.

புறங்கூறத் துணிகின்ற பொழுதே பிறர் பொருளை அபகரிக்க நினைப்போம். பிறர் பொருள் மட்டுமல்ல— பிற உயிர் கட்கும் தீங்கு செய்யத் துணிவோம்.

சிறு பிராணிகட்கும் தீங்கு செய்யாதே

எந்தச் சிறு பிராணியாக இருந்தாலும் அதற்குத் தீங்கு செய்யாத வாழ்க்கையே தேவை. தீங்கு செய்ய எண்ணும் பொழுது பொய் பேசுவோம். உண்மையிலிருந்து மாறுபடுவோம். திருடத் துணி வோம். அந்த வாழ்க்கையெல்லாம் தேவையா?

பொய் பேசாத — உண்மை பிறழாத வாழ்க்கை யன்றோ தேவை? திருடும் வாழ்க்கை தேவையா?

சமூகத்தை தம் போலித் தனத்தால் — பதவிச் செருக்கால் — அதிகார ஆணவத்தால் திருடத் துணி பவன், சுரண்ட முயல்பவன் மிகவும் தீமையானவன். அவன் தவிட்டிற்குச் சமம்.

மகாவீரரின் நிழலில்கூட அவன் ஒதுங்கத் தகுதி யற்றவன். அவனுக்குத் தியானம் ஏன்? யாத்திரை ஏன்? அவன் இடும் பிச்சையைப் பிறர் விரும்பியா ஏற்பர்?

பிறருக்குப் பிச்சையிட விரும்புவோர் தாங்கள் இடும் பிச்சை உணவு தம் உண்மை உழைப்பில் கிடைத்த பொருளால் சமைத்ததாக இருக்கவேண்டும். பிறரை ஏமாற்றி வஞ்சித்து, கையூட்டு வாங்கி இடும் பிச்சை நச்சுணவுக்கு ஏற்றதாகும்.

பிறரை ஏமாற்றுதல் என்பது பெரிதும் கொடிய தாகும். அடுத்தவனுக்கு வேண்டியதை அவன் பார்த் திருக்க அடுத்தவர் பெற முயற்சிப்பது மிகவும் தீமை யுடையதாகும்.

அடுத்தவன் வீட்டையோ சொத்தையோ — அவர்கள் அனுமதியின்றி அனுபவிக்க முயற்சிக்கக் கூடாது.

பிறர் வீட்டு நிழல் எத்தனை நாளைக்குத் தாங்கும்? பிறர் வீட்டு நிழலில் எத்தனை நாட்கள் ஒதுங்க முடியும்?

அடுத்த வீட்டு வெளிச்சத்தில் எவர் குழந்தை கட்கும் அறிவூட்ட முடியுமா?

அடுத்தவர் நூலையும் அவர் அனுமதியின்றி எடுக்கக் கூடாது. நூல்கள் நமக்கென்றே இருக்க வேண்டும். காரணம் மக்கள் பெறப்போகும் நல் லறிவு — நற்கொள்கை — நற்செயல்கள் நல்ல நூல் களிலிருந்தே!

நிர்வாண நிலையை எய்துதல்

நல்ல தவத்தாலும், அனுபவிக்கும் துன்பங்களாலுமே நிர்வாண நிலையை எய்த முடியும்.

கடும் தவம் வேண்டும்!

கடும் துன்பம் வேண்டும்!

சுகபோகம் வேண்டாம். எல்லையின்றி தவம் செய்ய முயலுதல் வேண்டும். கடுமையான துன்பங்களைத் தாங்கும்பொழுது தான் நிர்வாண நிலை கிட்டும்.

எனவே சிராவகர், சிரவணோபாசகர் என அழைக்கும் இல்லறத்தாருக்கு உயர்ந்த கொள்கைகளை உபதேசித்து சம்பிரதாயத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

இந்த முயற்சியே தேவை?

முயற்சியற்ற வாழ்க்கை முன்னேற்றமுடைய வாழ்க்கையாக இருக்குமா?

14

அகிம்சையின் ஆணிவேர்

உயிர் உடலில் பரவுதல்

மகாவீரர் பற்பல நினைவுகளை இவ்வுலகில் விட்டுச் சென்றுள்ளார். உயிர் உடம்பு முழுவதும் பரவி நிற்கிறது என்றும், அந்த உடம்பின் உருவத்திற்கு ஏற்ற படி உயிரானது சிறிதும் பெரிதுமாக அமைகிறது என்றும் கூறுகிறார்.

''எறும்பின் மிகச் சிறிய உடலில் பரந்து நிற்கும் உயிர் அதன் உடலுக்குத் தக்கபடி சிறியதாகவும், மிகப் பெரிய யானையின் உடம்பில் பரந்து நிற்கும் உயிர் அதன் பெரிய உடம்புக்குத் தக்கபடி மிகப்பெரிய தாகவும் அமைந்து நிற்கும் என்பது ஆருக தமதக் கொள்கை'' என 'சமணமும் தமிழும்' என்ற நூலில் திரு மயிலை சீனி. வேங்கடசாமி அவர்கள் கூறுகிறார்.

மகாவீரரின் காலத்திற்கு முன்பே அவர் தழுவிய சமண மதம் மிகவும் சிறப்புடையதாகத் திகழ்ந்தது. அந்தச் சமயம் சுவேதாம்பர சமணம், திகம்பர சமணம், ஸ்தாகை வாசி சமணம் என மூன்றுகப் பிரிந்திருந்தாலும் ஒவ்வொருவர் ஒவ்வொரு விதமாக இருந்ததை மிகவும் புதுமையாகக் காணல் வேண்டும்.

அவர்கள் தோற்றமே மாறுபட்டது. அதிக உயரமும், அதற்கேற்ற பருமனும் கொண்டு பல்லாயிரக் கணக்கான ஆண்டுகள் உயிர் வாழ்ந்திருந்தனர் என்றுல் அது எப்படிச் சாத்தியமாகும் என அறிவு பூர்வமாக ஒரு வினுவை இன்று பலர் எழுப்பலாம்.

உருவமும், தோற்றமும், உயிர்வாழ்ந்த நாட்களும் பெரிதல்ல! அவர்கள் கொள்கைகள் — நற்செயல்கள் — நல்லெண்ணங்களே நமக்குத் தேவை.

நல்வினையும் தீவினையும்

நல்வினை தீவினை என்னும் இருவினைகளைச் செய்து அவற்றின் பயனுகிய இன்ப துன்பங்களைத் துய்த்தல் வேண்டும்.

நல்வினைகளால் வீடுபேறு அடைய முடியும் துறவு வாழ்க்கை வேண்டும். துறவு வாழ்க்கை மேற்கொள்ளாமல் இல்லறததில் ஈடுபட்டு வீடுபேறு வேண்டும் என்றுல் அது நிச்சயம் கிடைக்காது.

நல்ல எண்ணங்களே வேண்டும். அந்த எண்ணங்களே உயர்ந்த மனிதர்களாகச் செய்யும். அந்த நல்ல எண்ணங்களும், நல்ல சொற்களும், நல்ல செயல்களும் புண்ணியத்தை நல்கும்.

புண்ணியம் உயிர்களைத் தேவராகவும், மனிதராகவும் பிறக்கச் செய்கிறது. அறிவு, செல்வம், இன்பம், புகழ், மேன்மை, சிறப்பு முதலியவைகளைப் புண்ணியம் அடையச் செய்கிறது.

தீய எண்ணங்களால், தீய சொற்களால், அறிவு அழிக்கப்படுகிறது. துன்பம் பெருகுகிறது. இகழ்ச்சி தேடி வருகிறது. வறுமை வாய் கிழித்து நிற்கிறது. சிறுமை சிங்கார நடனம் புரிகிறது. அம்மம்மா! தீய செயல்களால் பாவமே பெருகும். அந்தப் பாவங்களால் அடையும் துன்பங்கள் எத்தனை?

நீர் ஊற்றுக்களில் நீர் சுரந்தால் மட்டுமே மனிதரும், புழுப் பூச்சிகளும் உயிர் வாழ முடியும். நீர் ஊற்றில் நீர் சுரப்பதுபோல் நல்வினையும், தீவினையும் உயிரில் சேர்வது ஊற்ருக எண்ணப்படும்.

நல்வினைகளால் பிறரால் அன்புடன் ஆதரிக்கப்படுவோம். பாசமும், பந்தமும் ஏற்படும்.

ஆனால் பாச பந்தங்களிலிருந்து விடுபட்டு மோட்ச நிலையை அடைய முயற்சித்தல் வேண்டும். என் மோட்ச நிலையை அடைந்த உயிரையே கடவுள் என்போம்.

நல்ல ஞானமும், நல்ல காட்சியும். நல்ல ஒழுக்கமுமே தேவை. சிறந்த அறிவுடைய வாழ்க்கையை எவரும் விரும்புவர். எவரும் போற்றுவர். காணும் காட்சிகள் யாவும் நற்காட்சிகளாகவே திகழும்.

மிகச் சிறந்த விரதங்களால் போற்றப்படுவோம்.

'அகிம்சா பரமோ தர்ம' என்பதுஅடிப்படையான கொள்கையாகும்.

இன்னு செய்யாமையும் அருளுடைமையும்

அகிம்சையின் ஆணிவேரே, இன்னு செய்யாமையும், அருளுடைமையும், கொல்லாமையும், புலால் மறுத்தமே ஆகும்.

பிற உயிர்கட்கு ஊறு விளைவிக்க நினைப்பது பேதைமையாகும். ''ஓரறிவு உயிர் முதலாக ஐயறிவுயிர் ஈருக அவை சிறியவையாயினும், பெரியனவாயினும் அவற்றைக் கொல்ல மாட்டேன்'' என்பதே சமணர்தம் கொள்கையாகும்.

பிற உயிர்களைக் கொல்லவும் நினைத்தல் கூடாது. நினைப்பு என்பது உயர்வாக இருக்க வேண்டுமே ஒழிய, நினைப்பு என்பது தீமைகளில் உழலக் கூடியதாக இருக்கக் கூடாது.

மற்றவர்கள் கொல்லவும் மனம் மொழி மெய்களால் உடன்படல் கூடாது.

வாய்மை என்றும் உயர்வாம். தீமை பயக்கும் சொற்களைக் கூருமல் நல்ல மொழிகளைப் பேசி நம் சொற்களால் உயர்வு பெற முயற்சித்தல் வேண்டும்.

சொற்கள் எப்பொழுதும் உண்மையைக் கூறுவதாகவே இருத்தல் வேண்டும். பிறர் பேசும் பொய்க்கு உட்படல் கூடாது. பிறரைப் பொய் பேசத் தூண்டவும் கூடாது.

பிறர் பேசும் பொய்யால் அழிவு ஏற்படலாம். பொய்யுரைகளால் மனம் துன்புறும். மாசற்ற நல் வாழ்வில் சஞ்சலங்கள் ஏற்படும்.

தீமைக்கு இழுத்துச் செல்லப்பட்டு மன அமைதிக் காக கட்குடியைப் பெரிதும் விரும்புவோம். கள்ளா மையே நமக்குத் தேவை.

கள்ளமற்ற வாழ்க்கை வாழ கட்குடிக்காத பழக் கத்தை மேற்கொள்ள வேண்டும். வாழ்க்கையில் இன்பமே வேண்டும் எனக் கூறி பொய் பேசி, புன்மை யான வாழ்க்கை வாழ்ந்து, பிறர் பார்வையில் இழிந்து நிற்கக் கூடாது.

மயிற்பீலிக் குஞ்சத்தின் பெருமை

மனம் ஆசைகளை வெறுத்து பிற உயிர்களை அழிக்க எண்ணுமல் இருத்தல் வேண்டும். நடக்கும் பொழுதும் தரையை மூன்று முழ தூரம் பார்த்து புழுப் பூச்சிகள் இருந்தால் அவைக மிதிக்காமல் நடக்கப் பழகல் வேண்டும்.

இதற்காகவே துறவிகள் இரவில் பயணம் செய்ய மாட்டார்கள் என்பர். வழியில் உள்ள சிற்றுயிர்கள் காலில் மிதிபடாதபடி ஒதுங்குவதற்காக மயிற்பீலிக் குஞ்சத்தைக் கையில் வைத்திருப்பர் நம் துறவிகள்.

இது எவ்வளவு தூய்மையும் சிறந்த நல் லொழுக்கம் உடையதாக உள்ளது எனச் சிந்தித்துப் பார்த்தீர்களா?

சிறந்த சிந்தனையாளர்கள் நல்ல நாவடக்கம் உடையவர்களாகத் திகழ்வர். நாவடக்கம் உள்ள நல்ல மனிதர்களிடம் சில உயர்ந்த கருத்துகள் வெளி வரும். நாவடக்கம் உடையோர் பிறரைப் பழித்துப் பேச மாட்டார்கள். பிறரைப் பழிப்பதில் தனிச்சுகமும் தனிவிருப்பமும் உள்ளவர்களாகச் சிலர் திகழ்வர்— அது கூடாது.

இகழ்வதும், பழிப்பதும், கோபமாகப் பேசுவதும் தீமையையே விளைவிக்கும். அப்படிப் பிறரை இகழ்ந்து பேசுபவர்களை உலகம் தூற்றும்.

கடுஞ் சொற்களைக் கூறுதல் நிச்சயம் கூடாது.

இனிமையாகவே பேச வேண்டும்.

சிறந்த தரும ஒழுக்கங்களையே நாம் நாட வேண்டும்.

சமயக் கொள்கைகளையே போதிக்க முன்வர வேண்டும்.

புத்தகம்— மயிற்பீலி— கமண்டலம் ஆகியவை களை வைக்கும் இடங்களில் எறும்புமுதலிய சிறிய உயிர் கள் இறந்து போகாதபடி விழிப்போடு பார்க்க வேண் டும். சிறிய உயிர்கள்தானே? அவைகள் இறந்தால் நமக்கென்ன என எண்ணும் பழக்கம் மகாவீரரின் நற் சிந்தனைகளைத் தழுவுவோரிடம் இருத்தல் கூடாது.

ஐம்பொறி இன்பங்கள்

ஐம்பொறி இன்பங்களை அடக்க வேண்டும் என்பர்.

ஆடல் பாடல்களைப் பார்ப்பது தேவையில்லையாம்.

யாழ், வீணை ஆகியவற்றின் ஒலியையும் விரும்ப வேண்டாம். பூ, சந்தனம் ஆகியவற்றின் மணமும் தேவையில்லையாம்! என்னே வியப்பு!

இன்றைய உலகம் இன்பக் கேளிக்கைகளில் மூழ்கியுள்ளது. எங்குப் பார்க்கினும் "சுகம்வேண்டும், சுகம்வேண்டும்" எனமக்கள் எப்படியும்பொருள் ஈட்ட வேண்டும் என்ற ஆர்வத்தில் துடிக்கின்றனர். பொருளுக்காகப் பிறரைஅடித்து நொறுக்கவும்தயங்கவில்லை.

சிற்றின்பத்திற்கு அலைகின்றனர். அதற்காகப் பொருளைக் கண்டபடி செலவழிக்கத் தயங்கவில்லை. அதர்ம வழியில் ஈட்டிய பொருளே அற்பத்தனமாக தீயவழி இன்பங்கட்கு உதவுகின்றன.

உயர்ந்தோர் தம் விரதத்தில் ஏதேனும் குற்றம் நேர்ந்தால் அதனை உணர்ந்து வருந்தி மனம் மொழி மெய்களால் அக்குற்றத்தைப் போக்க முயற்சிப்பார்களாம்.

விரதங்கள் மிகவும் தூய்மையானவை.

விரதங்கள் மிகவும் புனிதமானதாக நலம் எண்ணுதல் வேண்டும். விரதங்களை நாமே அலட்சியமாக ண்ணும் தீய பழக்கங்கள் நம்மைவிட்டுப் போதல் வண்டும்.

"தீயவை எல்லாம் இனிச்செய்யேன் என்றடங்கித்
தூயவழி நிற்றலும் அற்று"
— அருங்கலச் செப்பு.

என்பர். "தீயவை எல்லாம் இனிச்செய்யேன்" என்ற உறுதியான மனம் நமக்கு வேண்டும்.

தீயவைகளைச் செய்யாதிருக்க நமக்கு உறுதியான மனம் வேண்டும்.

உறுதியான மனம் உடையவனே துன்பத்தைப் பொறுத்துக் கொள்ளும் ஆற்றல் உடையவனுவான். மயிர் களைகின்றபோது அவனுக்கு இருக்கும் பொறுமையே பொறுமை. மயிரைக் கத்தியால் களையாமல் கையினுல் மழிக்கும்போது எவ்வளவு பொறுமை வேண்டும் என்பதை எண்ணிப் பாருங்கள். இது நடக்கக்கூடியதா? நடக்கலாமா? என்ற வினைவையெல்லாம் எழுப்ப வேண்டாம். துறவிகள் துன்பத்தைப் பொறுக்கும் சக்தி படைத்தவர்கள் என்பது இதனுல் மிகவும் தூய்மையாகத் தெரிகிறது அல்லவா?

ஆடையற்ற உடலில் வெய்யிலின் வெப்பத்தையும், குளிரின் தன்மையையும் தாங்கி எறும்பு, கொசு

க்டித்தாலும் தாங்கும் சக்தி படைத்தவர்கள் எத்தகை உயர்ந்தவர்கள்?

அவர்களைப் போல நம்மால் இருக்க முடியுமா?

இருக்க வேண்டும் என எண்ணுவோம்!

புறத் தூய்மையும் அகத் தூய்மையும்

புறத் தூய்மையைவிட அகத் தூய்மையே மிகவும் சிறந்தது. புறத்தூய்மை வேண்டும் என்பதற்காக வாசனைத் தைலம் இட்டு நீராடுகின்ற மனமே கூடாது.

நீராடும் பொழுது அந்நீரில் உள்ள நுண்ணிய உயிர்களும் அழியக் கூடாது என எண்ணுவோர் எத்தனை உயர்ந்த குணம் படைத்தவர்.

நீருண்ணும் பொழுது ஏழுமுறை வடிகட்டிய பின்னர் குடிக்கவேண்டும் என எண்ணும் ஒழுக்கம் மிகமிக உயர்ந்ததல்லவா?

நல்லொழுக்கத்திற்கு இதைவிட உயர்ந்த பழக்கம் வேறென்ன வேண்டும்! பாய் படுக்கை இன்றி தரையில் படுப்பதும், இடது பக்கம் அல்லது வலது பக்கமாகப் படுக்கவேண்டும் என்பதில் எத்தனை நிம்மதி!

நின்றுகொண்டே கையில் உணவைப் பிச்சையேற்று — அதிலும் அளவோடு ஏற்று உண்டு, ஏழுமுறைவடிகட்டிய நீரை இரவு வருமுன் உண்ண வேண்டும் என்றால்...!

பொன்மனச் செம்மல்கள்

ஒரு நாளைக்கு ஒரு வேளையே உண்ணும் பழக்கம் எவ்வளவு புலனடக்கத்திற்கு உரியது எனப் பார்த்தீர்களா?

மகாவீரரின் கொள்கைகளைப் பின்பற்றுவோர் உண்மையில் மாமனிதர்களே! அவர்கள் அகிம்சையின் அன்பு மலர்கள், வாய்மையின் வித்தகர்கள், கள்ளுண்ணுத கற்பக மலர்கள், அவாவை அடக்கிய பொன் மனச் செம்மல்கள்.

பிரம்மச்சரியத்தை மேற்கொண்டபொழுது மனம் வாக்குக் காயங்களால் சிற்றின்பத்தை நீக்கியவர்கள்!! சிறந்த ஒழுக்கச் சீலர்கள்!!

இல்லறமும் துறவறமும்

பணம்—பதவி—பாவமூட்டை

இல்லற ஒழுக்கம் பிறர்நலம் பேணுவதாகும். இல்லறத்தில் இருந்து கொண்டு பிறருக்குச் செய்யும் சேவை பெரிதும் பாராட்டக் கூடியதாகும்.

இல்லற வாழ்வில் மேற்கொள்ளக் கூடியது, 'பிறருக்குத் தீங்கு நினையாதிருத்தலேயாகும். இல்லறம் செழிக்க ஆசைக்கு மனத்தை அடிமையாக்கி, அகிம்சையை மறந்து, வாய்மை இன்றி, கள்ளுண்டு,

அவாவை மறக்காமல் வாழும் வாழ்க்கை மிகவும் தீமை பயப்பதாகும்.

பிறருக்கு அதிகாரத்தாலோ, அந்தஸ்த்தாலோ, பணத்தாலோ, பதவியாலோ செய்யும் தீங்கு பாவ மூட்டையைச் சுமப்பதாகும்.

மிகவும் தூய்மை உடையவர்களாகத் திகழ பிறருக்கு நன்மை புரிவதே ஆகும். பிறருக்குச் செய்யும் தீங்கால் சொற்ப நேரமே இன்புறலாம். அதனுல் பின்னுல் மன அமைதி கெடும்.

பிறர் படும் துயரம் மிகவும் பொல்லாதது.

தீய காரியங்கள் அசட்டைத் தனங்களால் இருத்தல் கூடாது. அசட்டைத் தனம் வாழ்வில் பிடிப் பின்மையைக் காண்பிக்கும்.

அந்த அசட்டைத் தனத்தினுல் பூச்சிகளைச் சாக வைக்காமல் இருத்தல் வேண்டும். பால், எண்ணெய், நீர் இவைகளை மூடி வைக்காதபடியால் ஈ, எறும்புகள் விழுந்து இறக்கின்றன.

கொல்லாமை வேண்டும்

பிற உயிர்களைக் கொல்லாத வாழ்க்கையே நம்மைக் கொடுமையற்றவர்களாகக் காண்பிக்கும்.

இல்லறத்தில் இருப்போர் ஆயுதம் வைத்துப் பிறரைத் துன்புறுத்தும் பழக்கம் கூடாது. ஆயுதங்கள் அழிவிற்கு அல்ல! ஆயுதம் இல்லாமல் அவைகளைக் கூடிய மட்டில் குறைத்துக் கொள்ளல் வேண்டும்.

ஆயுதங்களால் நம் செல்வாக்குப் பெருகும் என எண்ணுதல் பேதமையாகும்.

செல்வாக்கால் பிறருக்குத் தீமை செய்ய எண்ணுவது அற்பத்தனமாகும். பிறரைத் தீமை செய்யத் தூண்டாத மனமே நமக்கு வேண்டும்.

நம் மனத்துள் ஏற்படும் அற்ப எண்ணங்கள் நல்ல தியானத்தாலேயே நடைபெறும்.

தியானங்கள் குறைந்த அளவு நாற்பத்தெட்டு நிமிடமாவது கோயிலிலோ அல்லது வீட்டிலோ அமைதியான ஓரிடத்தில் நடைபெறுதல் வேண்டும்.

அமைதியான தியானத்தால் அகந்தைகள் ஒழியும். ஆசைகள் பெருகாது. இன்பத்திற்காக ஏங்க மாட்டோம். துன்பம் தொலைதூரம் போகும். இல்லாமை ஒழியும். இன்பம் பெருகும்.

துறவிகள் பெறுபவை

துறவுகட்கு, உணவு, நீர், பழம், கமண்டலம், மருந்து, உடை, கம்பளி, படுக்கை, ஆசனம் ஆகியவற்றை தம் பணியாளர் மூலம் தராமல் தாமே தம் கைளால் மனமுவந்து தரவேண்டும்.

பிறர் மூலம் தருகின்ற பொழுது பெரும் தனவந்தர் என்ற செருக்கு மனத்துள் தோன்றும். கொடுப்பது செல்வந்தர், கொடுக்கப்படும் பொருள் செல்வந்தருடையது.

கொடுக்கின்ற பொழுது தன்னடக்கமும், எளிய தன்மையும் வேண்டும். ஆணவம் அங்கே தலை நிமிரக் கூடாது.

துறவிகளும், இல்லறத்தாரிடம் இருந்து பொருள் பெறும்பொழுது தம் வரவை அவர்கட்கு முன்கூட்டியே தெரிவிக்கக் கூடாது. தமக்கு இன்ன இன்ன பொருள் வேண்டும் என்பதையும் கூறக்கூடாது.

இல்லறத்தார் அறவாழ்க்கை மிகவும் போற்றத் தக்கது ஆகும்.

பிறப்பால் உயர்வு தாழ்வு வேண்டாம்

பிறப்பினால் உயர்வு தாழ்வு

மகாவீரரின் கொள்கைகளைக் கடைப் பிடிப்போர் மிகச் சிறந்த — இன்றும் பாராட்டக்கூடிய செய லொன்றைச் செய்தனர். அது மிகமிகப் போற்றுதற் குரியதாகும்.

பிறப்பினால் உயர்வு தாழ்வு காணும் குறுகிய மனப்பான்மை மகாவீரர் வழிவந்தோரிடம் இல்லை. எக்குலத்தவராயினும்—தங்கள் சமயக் கொள்கை களைப் பின்பற்றுபவரைப் பாராட்டினர்; தங்களின் நண்பர்களாக ஏற்றுக் கொண்டனர்.

"பறையன் மகனெனினும் காட்சி யுடையான்
இறைவன் என உணரற் பாற்று"

—என அருங்கலச் செப்பு நூல் கூறுகிறது.

சாதி பேதங்களால் மனிதன் உயர்ந்துவிட முடியாது. சாதி பேதங்களைக் கூறி மனிதன் பொய்த்து உயிர்வாழ இயலாது.

சாதி பேதம் பாராட்டாத சமணம் தமிழகத்தில் மகாவீரர் கொள்கைகளைப் பின்பற்றியவர்களிடம் தலை சிறந்து விளங்கியது.

சந்திரகுப்தன் மிகப்பெரிய அரசன்.

அவன் சமண சமயக் கொள்கைகளில் மனம் செலுத்தி தம் குருதேவர் பத்திரபாகுவுடன் அரசைத் துறந்து அவர் சீடனாகி வந்தான் என்றால் அந்தக் கொள்கையின் சிறப்பு அவன் மனத்துள் எவ்வளவு ஆழமாகப் பதிந்திருக்கும் என்பதை எண்ணிப் பாருங்கள்.

மகாவீரர் கொள்கைகளை தமிழகத்தில் வளர்க்க விசாக முனிவர் சென்றாராம்.

நான்கு தானங்கள்

உணவு, அடைக்கலம், மருந்து, கல்வி ஆகிய நான்கு தானங்களால் மகாவீரர் வழிவந்தோர் உயர்ந்தனர்.

ஏழை மக்களுக்கு, அவர்கட்குப் பசியாற்ற வந்தோருக்கு என்றுமே ஒரு உயர்வும் சிறப்பும் உண்டு. உணவிட்டவர்களை உயிர் உள்ளளவும் மற்றவர்கள் போற்றுவர் என்பர். பசிக்கு ஒருகவளம் உணவிடும் பண்பே உலகில் மிகச் சிறந்த பண்பாம்.

பசி என வருபவர்களுக்குப் புசி என வழங்கும் பண்பே இருந்து வந்திருக்கிறது.

தலைசிறந்த அறம் எது என்றால் பசியை நீக்குதலே ஆகும். தம்மைச் சுற்றியிருப்போர் பசியுடன் இருக்க தான் மட்டும் பால்பாயசம் சாப்பிட்டுக் கொண்டிருக்க இயலுமா?

இரண்டாவதாக அடைக்கல தானம். துன்பம் கொண்டவர்களுக்கு, மனச் சஞ்சலங்களால் பற்பல இன்னல்களை அளிப்பவர்கட்கு அடைக்கலம் அளித்தல் உயர்வாம்.

அச்சம் கொண்டு அடைக்கலம் என்று புகல் அடைந்தவருக்கு அபயம் அளித்துக் காப்பது அபய தானம் என்பர்.

மகாவீரரின் கொள்கைகளைப் பின்பற்றியவர்கள் இதற்காகச் சில இடங்களை அந்த நாளில் ஏற்படுத்தினர். அதற்கு ''அஞ்சினன் புகலிடம்'' எனப் பெயரிட்டனர்.

அத்துடன் அவர்கள் மருத்துவம் பயின்று இலவசமாக மருந்து கொடுத்தனர்.

இலவச மருத்துவ வசதி

ஏழை மக்கள் துயர்துடைக்க இன்றும் இலவசமாகப் பிறருக்கு மருந்தளிப்பது பெருந்தானங்களுள் ஒன்றுகும். அரசு பார்க்கட்டுமே—அடுத்தவர் கவனிக்கட்டுமே என நோயாளிகள் விஷயத்தில் அலட்சியம் செய்வது மிகவும் இழிவாகும்.

தொத்து நோய்கள் பரவுகின்றன.

தொழு நோயாளிகள் ஏராளம். இவர்கள் கண்ணீரைப் போக்க மருந்துகள் வாங்கித் தரலாம். சரியான மருத்துவ வசதியின்றி பலர் இன்றும் இறக்கின்றனர்.

மருத்துவத்துடன் கல்வியும் கற்பித்தனர். பாடசாலைகளைப் பள்ளிக்கூடம் என அழைத்தனர். பள்ளி என்றால் சமணப்பள்ளி அல்லது பௌத்தப்பள்ளி என்பது பொருளாம்.

மகாவீரர் கொள்கைகளைப் பின்பற்றியோர் தம் இல்லங்களில் நடைபெறும் திருமண நாட்களிலும் இறந்தோருக்குச் செய்யும் இறுதிக் கடன் நாட்களிலும் தம் சமய நூல்களைப் பல பிரதிகள் எழுதுவித்து அவற்றைத் தக்கவர்களுக்குத் தானம் செய்தார்களாம்.

பனை ஏடுகளில் அந்தக் காலத்தில் எழுதினர். பொருட் செலவும் காலமும் அதிகம். பொருள்

உடையவர்கள் மட்டுமே புத்தகம் எழுதி வைத்துக் கொள்ள அன்று முடிந்தது. செல்வம் படைத்த பலர் சமண நூலைப் பல பிரதிகள் எழுதுவித்து அவற்றைத் தானம் செய்தார்கள், என்றால் அவர்களின் உயர்ந்த குணங்களை—எப்படிப் புகழ்வது—எப்படிப் பாராட்டுவது என்று தெரியவில்லை.

கண்பார்வையற்றவர்களுக்கு கண்ணொளி வழங்க முற்படுவதும் இருளுடைய பகுதிகளுக்கு ஒளிதர எண்ணுவதும் மிகவும் உயர்ந்த செயல் அல்லவா?

நூல் எழுதுதல்

மகாவீரர் கொள்கைகளைப் பின்பற்றிய 'அத்தி முப்பெ' எனும் அம்மையார் தம் சொந்தச் செலவில் "சாந்தி புராணம்" எனும் சமய நூலை ஆயிரம் பிரதிகள் எழுதுவித்து தானம் செய்தார் என்னும்பொழுது நம் உள்ளம் எவ்வளவு மகிழ்கிறது தெரியுமா?

ஏழை மாணவ மாணவியர்கட்கு இன்றும் நூல்கள் சிலர் வாங்கித் தருகின்றனர். இந்தக் கொடை மிகவும் உயர்ந்ததாகும்.

இதைப்போல் இன்னும் சில நற்பணிகள் புரிந்துள்ளனர். தாய்மொழியில் தங்கள் மதநூல்களை எழுதினார்கள். அவர்கள்போகின்றஇடங்களில் வழங்குகின்ற தாய்மொழியில் அவர்கள் மதநூல்களை எழுதியது மிகவும் சிறப்பாம்.

வட்டார மொழியில் தம் கருத்துக்களை எழுதுவதே மிகவும் சிறப்பு.

மீன்பிடித்தல் வேட்டையாடுதல் ஆகிய உயிர்க் கொலை செய்யும் தொழில்களை அவர்கள் அறவே வெறுத்தனர். பயிர்த் தொழிலை மிகவும் சிறப்பித் தனர்.

மகாவீரரின் கொள்கைகளைப் பின்பற்றியோர் உயர்ந்த பண்பாடு உள்ளவர்களாய்—ஏழை மக்க ளுக்கு உணவளிக்கும் உத்தமர்களாய் நோயாளிகட்கு மருந்தளிக்கும் மங்கலச் செல்வர்களாய் எழுத்தறிவித் தவர் இறைவனுவார் என்பதற்கேற்ப கல்வியில் அறி வில் புத்தகத்தைப் பனை ஓலைகளில் எழுதி அன் பளிப்புத் தரும் வழக்கம் உடையவர்களாய், சாதிபேத மற்று, எந்தச் சாதியினரும், நம்சாதியினர் எனக் கொண்டு வாழ்ந்த வாழ்க்கை மிகவும் சிறந்த வாழ்க்கையாகும்.

அத்துடன் துயருற்றவர்களுக்குப் புகலிடம் தந்து அவர்கட்கு ஆதரவு நல்கியது மேலும் பாராட்டக் கூடியதாகும்.

பிராமணர்களைப் போல கோதானம், பூதானம், சுவர்ணதானம் முதலியதானங்களைப் பெருமல்உணவு தானத்தை மட்டும் பெற்ருர்கள் என எண்ணும் பொழுது அன்னதானச் சிறப்பு எவ்வளவு உயர்ந்தது என்பதைச் சற்றே எண்ணிப் பார்க்கவேண்டும்.

பிறப்பால் உயர்வு தாழ்வு பாராட்டாமல், கொலை யையும், புலால் உண்ணலையும் நீக்கிய பாங்கு மிகவும் சிறப்புடையதாகும்.

நாலடியார் கருத்துக்கள்

நாலடி இன்பச் சிறப்புகள்

மகாவீரரின் கொள்கைகளைப் பின்பற்றியவர்கள் சமணத் துறவிகள் என்போர் பல நீதிக் கருத்துகளைக் கூறியுள்ளனர். அவைகள் நான்கடிகள் கொண்டு 'நாலடியாராக'த் தமிழகஇலக்கிய உலகில் பவனி வருகின்றன.

இல்லறத்தைவிடத் துறவறமே சிறந்தது என சமண முனிவர்கள் கருதினர். 'துறவு' வாழ்க்கையை மிகவும் உயர்ந்ததாக எண்ணினர்.

செல்வம் நிலையற்றது. நீடித்த இன்பம் தரக் கூடியதல்ல. எத்தகைய செல்வம் படைத்தவர்கள் ஆனலும் ஏழைகளாகி விடுவர்.

உயிருள்ளபோதே நாம் நல்லறம் புரிதல்வேண்டும். அறமும் அருளும் உள்ளவர்களே மக்கள். அவர்களே மாமனிதர்கள்.

நாம் பெற்ற செல்வத்தால் நாம் நன்மை புரிதல் வேண்டும். செல்வம் பெற்று செழுங்கிளை தாங்காமல் அறமற்ற வாழ்வு வாழ்வோர் அற்பர். அவர்கள்

எளிய உணவே ஆயினும் பிறருக்கு அளித்து உண்ணல் வேண்டும்.

கருமிகள் சேர்க்கும் பணம் காலத்தால் அழிக்கப் படும். கள்வர்கள் களவாடுவர். தேனீக்கள் சேர்த்து வைககும் தேனைப் பிறர் அபகரிக்க முன்வருதல்போல் கருமிகள் செல்வம் பிறரால் கொள்ளையடிக்கப்படும். கொடுக்கின்ற பழக்கம் வேண்டும். அத்துடன் கொடுக் கின்ற மனம் உடையவர்களைத் தடுக்கின்ற மனம் நம் மிடையே வரக்கூடாது.

நாம் பேராசைகளைத் துறந்து இளமை முதலே தானம் செய்யவேண்டும். முதுமையில் செய்வோம் என நாட்களை தள்ளக் கூடாது.

அழகால் விளையும் ஆணவம்

ஆசைகளைத் துறத்தல் வேண்டும். இளமையில் மேற்கொள்ளும் ஆசைகளால் பயனில்லை. இன்றைய ஆசை நாளைய அழிவிற்கு அடிப்படையாகும்.

இன்று இளமையுடன் தன் அழகால் ஆணவம் பெற்று உயர்ந்த வாழ்விற்கு ஆசைப்படுபவள் நாளை அழகு அழிந்து கிழவியாகி இறப்பது உறுதி.

அழகைப் பெற்று எவரும் ஆணவம் கொள்ள முடியாது.

எவ்வளவு அழகுடைய ஆணும் பெண்ணும் இறப் பது நிச்சயம்.

காலையில் மலரும் அழகான மலர் மாலையில் ''நான் அழகுடன் திகழ்கிறேன் — என்னை வாடச் செய்யாமல் இருக்கச் செய்'' என்றால் இயற்கை விடுகிறதா?

பூ மலர்ந்தாலும் — புது மணப் பெண் அழகால் சிரித்தாலும் அழிவது நிச்சயமே! பூ அன்றே வாடும்— புது மணப் பெண் முதுமையுற்று நாள்பட்டு இறப்பாள்.

நிலையற்ற இளமை இன்பம் பாராட்டக்கூடியதல்ல. அதை அறிவுடையவர்கள் விரும்ப மாட்டார்கள். அந்த இன்பம் பழுத்தமரம் போன்றது.

கனி பழுத்தால் அதைக் கடிக்காமல் யாராவது விட்டு வடுவார்களா? பழுத்த கனியை அழகுள்ள கிளி கொத்துகிறது. ஆனால் அந்த அழகுள்ள கிளியும் இறக்காமல் இருக்கிறதா?

அறிவுடையவர்கள் உலகத் துன்பத்தில் இருந்து விடுபட உறுதி கெள்வார்!

உயிர் உள்ளபோது தான் மதிப்பு. இறந்தால் மதிப்பில்லை, உயிர் உள்ளபோது நாம் செய்யும் நற்பணிகள் — நாம் எழுதும் நூல்கள் — நாம் பேசும் பேச்சு — நாம் நாட்டிற்கும் வீட்டிற்கும் செய்யும் தொண்டு ஆக எல்லாமே பிறரால் மதிக்கப்படும்.

ஆலம் விழுதும் அழியாப் புகழும்

நாம் உயிருடன் இருக்கும் பொழுது செய்யும் நற்பணிகளே நம்மை அழியாமல் புகழுக்கு இட்டுச் செல்லும்.

இருக்கின்ற பொழுது நாம் செய்யும் அன்ன தானம், அடைக்கல அகம், அருங்கல்விச் சாலை ஆக அத்தனையும் நம் புகழ்பாடும்.

ஆலம் விதை மிகச் சிறியதுதான். ஆனால் அந்த விதை செடியாகி மரமாகி நிழல் தரும்போது நாம் பெறும் பயன் பெரிதல்லவா?

பெரியவர்களுக்கும் நல்லவர்களுக்கும் நாம் செய்யும் உதவியே பெரியதாகும். அந்த உதவி சிறிய தாக இருந்தாலும் பெரியதாக வளர்ந்து நிற்கும்.

உதவிகள் என்பது நமது அன்பினுல் அவசரங் கட்கும், தேவைகட்கும் எளிய முறையில் செய்யக் கூடியதாகும். நாம் செய்யும் உதவிகள் என்றென்றும் நன்றி பாராட்டக் கூடியதாகத் திகழ வேண்டும்.

ஏழ்மையில் உழலும் தாய்மார்களுக்கு நாம் செய்யும் உதவிகள் பாராட்டக் கூடியதாகும்.

அழகும் பெண்களும்

உதவிகள் பெயரால் பெண்களின் உறுப்புகளை வர்ணித்து உளறுதல் அறிவற்றவர் செயலாம். அறி வற்றவர்கள் போலி அழகுக்கும், பொல்லாத இளமைக் கும் மயங்குவர்.

பெண்களின் அழகைக் கண்டு மயங்கவேண்டாம்.

மயங்காத அறிவு படைத்தவர்களே துறவிகள். அவர்களே ஞானிகள்! அவர்கள் திருமணத்தை விரும்ப மாட்டார்கள். மிகவும் பொறுமைசாலிகள்.

அவர்கள் தம்மை அவமதிப்பவர்களை அற்பர் களாக எண்ணுவர். அந்த அற்பர்கள்மீது சினம் கொள்ள மாட்டார்கள். சினமற்ற வாழ்வே அவர் கட்குத் தேவை.

சினமற்றவர்கள் நெஞ்சுரம் கொண்டவர்கள். உயிருக்கு ஆபத்தை அவர்கள் என்றும் உண்டாக்கிக் கொள்ள மாட்டார்கள்.

கடுஞ்சொற்கள் என்றும் நம்மையே திருப்பித் தாக்கும். கற்றவர்கள் எப்பொழுதும் சினந்து கடுஞ் சொற்கள் கூற மாட்டார்கள்.

கடுஞ்சொற்கள் கூறுதவர்கள் மென்மையான மலர் போன்ற குணம் படைத்தவர்கள். அவர்கள் என்றும் உயர்வையும் பெருமையையுமே நாடு பவர்கள்.

கடுஞ்சொல் கூறுதவர்கள் சிறியோரை மதிப்பர்.

தம்மினும் கீழ்ப்பட்டவர் என எவரையும் அலட்சி யப் படுத்த மாட்டார்கள். அவர்கள்மீது பொருமை கொள்ள மாட்டார்கள்.

பகைவரைப் பொருட்படுத்தாமல் இருப்பது பலவீனமாகாது. அதுவே சிறந்த பொறுமையாகும். தீமை செய்பவர்களுக்குத் திருப்பித் தீங்கு செய்யாத மனமே வேண்டும்.

போதுமென்ற மனமே நமக்குத் தேவை. அதுவே நமக்கு அறிவையும் நல்லொழுக்கத்தையும் தரும்.

போதுமென்ற மணம் படைத்தவர்கள் துன்பமில்லா மல் வாழ்பவர்களே யாவர்.

நாம் ஒருவரை யொருவர் நன்கு புரிந்துகொண்ட பின், கலந்து பழகிய பின், விட்டுப் பிரியும் மனம் கூடாது. நண்பர்கள் சொல்வதை நாம் பொறுத்துக் கொள்ளவேண்டும்.

பிறர் பழிச்சொல் நமக்குக் கூடாது. பழிச் சொல் லற்ற பண்புமிக்க வாழ்க்கையே நமக்குத் தேவை.

இழிந்தப் பொருளேயும், இழிவுடைய மக்களேயும் யாரும் விரும்பமாட்டார்கள். பழிச் சொற்களால் ஏற்படுவதே இழிவாகும்.

மனிதன் புகழுக்கும் பெருமைக்கும் தன்னே அர் பணிக்கவேண்டுமே தவிர இழிவுக்கு யாரும் தன்னே அடிமையாக்கக் கூடாது.

பிறர் மனேவி

பிறர் மனேவியை மயக்கத்தால் — சபல சித்தத் தால் — அளவற்ற ஆசையால் விரும்புவர். அவ் வாறு விரும்புவது பழிப்பிற்கும், பாவத்திற்கும் ஆளா கும் வழி என்பதை முதலில் தெரிந்து கொள்வதில்லே.

பிறர் மனேவியை விரும்புகின்றவன் தன் செயல் துணிவுடையது எனப் பெருமை கொள்ளலாம். ஆனுல் அச்செயல் ஆபத்தானது. அதிக துன்பத்தைத் தரக்கூடியது ஆகும்.

பிறர் மனைவியை நாடாதவர்களே பேரறிவாளர்கள். அவர்களிடமே அன்பும் ஈகையும் இருக்கும். ஈகை இருக்கின்ற இடத்தில் இரக்கமும் இருக்கும்.

ஆண் பனையும் பெண் பனையும்

கொடுப்பவர்களே சொர்க்கம் புகுவர்.

பிறருக்கு உதவி செய்பவர்கள் பெண் பனைக்கு ஒப்பாவர். பெண்பனை பூத்துக் காய்த்துப் பழுக்கும்.

ஆனால் பிறருக்கு உதவி செய்யாதவர்கள் ஆண் பனைக்கு ஒப்பாவர். ஆண் பனையில் பூ மட்டுமே உண்டாகும், காய்த்துக் கனிவதில்லை.

அளவுக்குமேல் ஆசை உண்டாகக் கூடாது.

நமக்கு அடக்கம் தேவை. பிறருக்கு அடங்காதவர்கள் ஆணவத்துடன் செயல் படுபவர்கள். பேய்ச் சுரைக்கு ஈடாவர். பேய்ச் சுரையை எவ்வளவு பண்டங்களுடன் சேர்த்து உண்டாலும் அதன் கசப்பு நீங்காது. அடங்காதவர்கள் எவ்வளவு உண்மை நூல்களைக் கற்றாலும் அடங்கி நடக்க மாட்டார்கள்.

உண்மை நூல்களைப் படிக்கும்பொழுது உயர்ந்த பண்பும், சிறந்த அடக்கமும் ஏற்படும். ஆனால் அடங்காதவர் படிக்கும் படிப்போ...! அம்மம்மா! அதைப் பற்றிச் சொல்லவா முடியும்?

தன்னலம் கருதும் வஞ்சகர் நட்பால் நன்மையில்லை. தீமைதான் உண்டு.

தன்னலம் கருதுபவர்கள், தங்களின் சிறிய திறமையையும் பெரிதாக மதித்து அறிவுடையவர்களை இழிவாகவே எண்ணுவர். தம் திறமைக்குப் பிறர் பொருள் தரக் கடமைப்பட்டவர் என எண்ணுவர்.

அவர்கள் எண்ணம் வேறு செயல் வேருக இருக்கும்.

இல்லறமும் துறவறமும்

மகாவீரரின் கொள்கைகளைப் பின்பற்றுவோர் துறவறத்தையே பெரிதாக எண்ணவில்லை. இல்லறத்தில் இருந்துகொண்டே நன்மை செய்ய முடியும் என நம்பினர்.

பிறருக்கு உதவி செய்யவேண்டும் என எண்ணுபவர்கள் சிறந்த கல்வியாளர்களே!

கல்வி அறியாமையைப் போக்கும் மா மருந்தாகும். கல்வியால் சமூக வாழ்வில் நாம் உயர்ந்த மனிதர்களாக மதிப்போம். கல்வி கற்றோர், பலர் பிறருக்குத் தொண்டு புரியவேண்டும் என்ற எண்ணத்துடனேயே இருப்பர்.

கல்வியால் பிறப்பில் ஏற்பட்ட உயர்வு தாழ்வு மறையும்.

நல்ல நூல்களை நாம் படிக்க ஆர்வம் கொள்ளுதல் வேண்டும்.

மனிதனின் அறிவை எடைபோடுவதே அவன் படிக்கும் நல்ல நூல்களால்தான்.

அறிவு தரும் நூல்கள்

நல்ல நூலறிவுடையவர்கள் உலகில் தலைசிறந்து திகழ்வர். அறிவு தரும் நூல்களே ஒரு இல்லத்தின் ஒளி விளக்குகள்!

அறிவு தரும் நூல்களைக் கற்றுணர்ந்தோர் சிறந்த ஒழுக்கச் சீலர்களாய்த் திகழ்வர். ஒழுக்கம் உடையவர்கள் அறிவு — நற்செயல் — ஈகை ஆகியவற்றுள் தலைசிறந்து திகழ்வர்.

கடமை தவறுமல் காரியங்களைச் செய்வோர் நற்குடியில் பிறந்தவர்களே! கடமை தவறுமல் பணி புரிபவர்கள் சமூகத்தால் பெரிதும் புகழப் படுவர். புகழப் படுவதோடு மட்டுமல்ல; கௌரவிக்கவும் படுவார்கள்.

நல்ல கடமை புரிவோர் தீய சக்திகளை எதிர்க்கத் தம் உள்ளத்தை எப்பொழுதும் பக்குவப்படுத்தி வைத்திருப்பர்.

தீய சக்திகளை ஆதரிப்போர் கீழ்க்குடியில் பிறந்தவர்களே ஆவர். அவர்கள் செல்வத்தையும் செல்வாக்கையும் குறுக்கு வழியில் பெற முயற்சிப்பர்.

மற்றவர்களுக்கு நன்மை செய்யவேண்டும் என்ற மனமே அவர்கள் நெஞ்சில் எழாது. நாம் பிறருக்கு நன்மை செய்வது போய் மற்றவர்கள் நமக்கு எந்த நன்மையாகிலும் செய்யமாட்டார்களா என ஏங்குவர்!

அறிவுடைய மேன்மக்கள் எப்பொழுதும் உயர்ந்த செயல்களையே செய்ய விரும்புவர். வறுமையுற்ற பொழுதும் அவர்கள் செயல் நல்ல செயல்களாகவே இருக்கும்.

பிறர் இரகசியங்களும் நீதி நூல்களும்

அறுவுடையோர் நல்ல நீதி நூல்களைப் பின் பற்றுவர். நீதி நூல் முறைகளை விரும்புபவர்கள் பிறர் இரகசியத்தை விரும்ப மாட்டார்கள். பிறர் இரகசியங்களை அறிந்து புறங்கூறிப் பேசுபவர்கள் புல்லர்களே! பிறர் இரகசியங்களை அறிந்து அவர்களை இழிவாக எண்ணி, தங்கள் இழிசெயல்களை மறைத்துக்கொண்டு மற்றவர்களைப் புறங்கூறிப் பேசுவோர் உயிரற்ற பிணம் போன்றவர் ஆவர்.

அவர்கள் தங்கள் செல்வத்தை எந்தச் சுரங்கத்திலும் வைக்க முடியாது. எல்லாச் செல்வங்களும் நிறைந்த ஒரு சுரங்கம்போல இருப்பவர்கள் நல்ல குலத்திலே பிறந்தவர்களே ஆவர்.

நற்குடிப் பிறந்தோர் வெறுக்கத் தகுந்த செயல்களைச் செய்ய மாட்டார்கள். அவர்களை பெரியோர்கள் விரும்புவர்.

பெரியவர்களாக நம்மை நாமே மதிப்பதில் பெருமை இல்லை. வெளியே பெரியோர்கள் நம்மைப் பெரியவர்களாக மதிக்க வேண்டும்.

பெரிய மனிதர்களாக நாம் திகழ நம் செயல்கள் அறிவுடையதாக — அன்புடையதாக — பிறர் நலம்

பேணுவதாக — தன்னலம் கருதாததாக—எத்திக்கும் போற்றக் கூடியதாக ''எவர் தூற்றினும் தூற்றட்டும்; நம் செயல் சிறப்புடையதாக இருக்கவேண்டும் எனக் கடமை உணர்ந்து செயல்படக் கூடியதாக'' இருக்க வேண்டும்.

இழிவாக எண்ணப்படும் குடியிலே பிறந்தவர்கள் நல்லவர்களுடன் கூடினுல் புகழ் பெறுவர். சாக்கடை நீர் இழிவானதுதான். ஆனுல் அது ஆற்றையோ குளத்தையோ அடைந்தால் அது புனித தீர்த்தமாகக் கருதப்படுகிறது.

நட்பின் சிறப்பும் ஈதலின் உயர்வும்

அற்பர்கள் நல்லவர்களுடன் சேரும்பொழுது புகழ்படுகின்றனர்.

மனத்தால் மாசற்றவர்களாக நாம் வாழ்தல் வேண்டும். நாம் பிறருடன் கொள்ளும் நட்பு தூய்மை யுடையதாக இருத்தல் வேண்டும். தீயோர் நட்பு தீமையே பயக்கும்.

நாம் செய்யும் நட்பு பெருமையுடையதாக — இளமைப் பருவத்திலேயே நல்லறங்கள் புரியக்கூடிய தாக இருத்தல் வேண்டும்.

இல்லறத்தால் வரும் இன்பம் நிலையற்றதாகும். அதை அறிந்தவர்களே எப்பொழுதும் இன்புற்று வாழ் வார்கள்.

இன்புற்று வாழ்பவர்கள் ஈதலைச் செய்பவர்கள். ஈதலைச் செய்தோர் இசைபட வாழ்பவர்களே யாவர்.

பிறருக்குக் கொடுத்த பிறகேதான் உணவு உட்கொள்வார்கள் அறிவுடையார்கள். உண்பதற்குமுன் காக்கைக்குச் சோறிடல், குழந்தைகட்குச் சோறு கொடுத்தல், ஏழைகட்கு உணவு கொடுத்தல் போன்ற அறம் சிறப்புடையதாகும்.

அறம் புரிபவர் நம்பிக்கையுடன் உயிர் வாழ்வார்கள். அவர்கள் பிறரை நம்பி வாழமாட்டார்கள். அவர்கள் முயற்சி சிறப்புடையதாகத் திகழும்.

முயற்சியுடையவர்கள் தாம் தொடங்கிய செயலை, எத்தகைய துன்பம் ஏற்படினும் தொடர்ந்து விடாமல் செய்து முடிப்பர். அப்படிச் செய்வதே ஆண்மையும் முயற்சியுமாகும். அவர்களே அறிவுடையவர்கள். அவர்கள் பிறரிடம் கூறுமலே தாம் எடுத்துக்கொண்ட செயலைச் செய்து முடிப்பர்.

அந்தச் செயலைச் செய்து முடிக்கின்றவரை நன்ருக உறங்கமாட்டார்கள். நல்ல உணவை உட்கொள்ளமாட்டார்கள். சிறந்த செயல்களை முயற்சியுடன் செய்து முடிப்பவர்கள் அன்புடையவர்களாகத் திகழ்வர். அவர்கள் இடும்உப்பற்ற கூழ் பால் சோற்றைவிட இனிமை தரும்.

அன்பில்லாதவர் பால்சோறே இட்டாலும் அது இனிக்காது – சுவைக்காது! அன்புடையவர்கள் இனிய

வர்களே! அவர்கள் தரும் உணவு அற்பமானதாக இருந்தாலும் அது இனிமை தரும்.

அன்புடையவர் வீட்டில் உண்பது கூழாக இருந்தாலும் அது அமுதம்போல் இனிக்கும்.

அன்புடையவர்கள் உயர்ந்த நட்புடையவர்களாகவே திகழ்வர். அவர்கள் எப்பொழுதும் ஒரே தன்மையுடன் பழகும் பண்புள்ளவர்களாகத் திகழ்வர்.

குளத்தில் மலரும் தாமரைப் பூவைப்போல காலைப்பொழுதில் மலர்ந்து பின்பு மாலையிலே குவிவது போல நட்பு வாடக்கூடாது.

நட்பு என்பது கோட்டுப்பூ போலத் திகழ்தல் வேண்டும். அது மரக்கிளையிலே மலர்ந்த மலரைப் போல மலர்ந்தபடியே இருக்கும். அது மலர்ந்தபிறகு குவியாது.

நட்பு என்பது அரும்பியபின் அழியாமல் இருத்தல் வேண்டும். அந்த நட்பு என்றும் பிரியக்கூடியதாக இருத்தல் கூடாது.

சான்றோர்கள் அவ்வாறே இருப்பர்.

அவர்கள் பனைமரம்போல அளவற்ற பயனைத் தருவர். பழமையான நட்பு உடையவர்களாகவே திகழ்வர்.

பாக்கு மரம்போல நட்பிலே கடைப்பட்டுத் திகழக் கூடாது.

உயர்ந்த நட்புடையவர்கள் என்றும் பிறருக்கு உதவி செய்வர். அவர்கள் அளிக்கும் உணவு கீரைக் கறியாக இருந்தாலும் அது அமிழ்தமாக இனிக்கும். நம்மை விரும்பாமல் நம்மீது அன்புடையவர்போல் — சிறந்த நட்புடையவர்போல் நடித்து அளிக்கும் உணவு எட்டிக்காய் போன்றது.

கசப்பான நட்புடையோர் யாருக்குப் பயன் படுவர்?

நண்பர்கள் இருவருள் எவரிடமேனும் ஒருவரிட மாவது பொறுமை வேண்டும். பொறுமையுடையவர் கள் பொன்போல் திகழ்வர்.

பொறுமையற்றவர்கள் சுயநலக்காரர்களே! அவர் கள் தங்கள் காரியம் முடியும்வரை எதுவும் செய் வார்கள்.

உயர்ந்தோர் நட்பு சிறந்த பண்பாடு மிக்கதாக வான் பொய்ப்பினும் தான் பொய்யாத வாழ்வுடைய நட்பாக இருக்கும். தாழ்ந்தோர் நட்பு வைக்கோலிற் பிடித்த நெருப்புக்குச் சமமாகும்.

உயர்ந்த நட்புடையவர்கள் எப்பொழுதும் மலர்ந்தபடியே உள்ள குவளை மலர்போல இருப்பர். ஆனால் பகலில் குவிந்து இரவில் மலரும் ஆம்பல் மலர் போல கெட்டவர்கள் அடிக்கடி மாறுவர்.

ஆதாயம் இருந்தால் மட்டுமே அண்டி வருவர்!

உயர்ந்த நட்பு என்பது கஸ்தூரி மணம் போன்றது. அது காலத்தால் அழிக்க முடியாதது. கள்வர்களால் களவாட முடியாதது. தம் உயிர்கொடுத்தேனும் தம் நண்பர் துன்பத்தையும் துயரையும் துடைக்கக் கூடியது.

சிறந்த நட்புடையவர்கள் உயர்ந்த அறிவுடையவர்களாகத் திகழ்வார்கள்.

உயர்ந்த அறிவுடையவர்கள்

உயர்ந்த அறிவுடையவர்கள் வறுமை அடைந்த பொழுதும் அடக்கமாகவே திகழ்வர். அவர்கள் நல்ல குடியில் பிறந்தவர்களாக இருப்பர்.

வாழைக்காய் வேப்பிலைக்குள்ளிருந்து பழுத்தாலும், தனது இனிய சுவையிலே இருந்து சிறிதும் மாறுபடாது. அதுபோல நல்ல அறிவும் குணமும் உடையவர்களுடன் சேர்ந்திருக்கும் கூட்டம் கெட்டதானாலும் அந்தக் கெட்டவர்களின் நட்பால் அந்த நல்லவர்களின் மனம் தீமைகளின் பக்கத்திலே சேர்வதில்லை.

மாசற்ற அறிவுடையவர்களை யாரும் கெடுத்துவிட முடியாது. மிகச் சிறந்த அறிவுடையவர்கள் நல்ல நூல்களைக் கற்றவர்களாகத் திகழ்வர்.

உயர்ந்த அறிவு என்பது தோண்டத் தோண்ட ஊறும் மணற்கேணி போன்றது. அந்த மணற்கேணி

தரும் குளிர்ந்த நீர்போல சிறந்த அறிவுடையோர் வழங்கும் ஒழுக்க நீதிகள் உலகில் புகழக கூடியதாகும்.

ஒருவரிடம் கொள்ளும் நட்பு நல்லதா கெட்டதா என ஆராயக் கூடியதாக இருத்தல் வேண்டும்.

நல்ல நட்புடையவர்கள் உயர்ந்த கல்வியைக் கற்றவர்களாகத் திகழ்வர். உயர்ந்த கல்வி பெருதவர் கள் தன் மனம்போன போக்கில் செல்வர். அவர்கள் நாய்க்கு ஒப்பாவர். நாயை எவ்வளவு சுத்தமாக வைத்திருந்தாலும் அது அசுத்தத்தையே நாடிச் செல்லும். அதைப் போலவே கல்லாதவர்களும் இருப்பர்.

மனம்போன போக்கில் நாம் செல்லுதல் கூடாது. மனம் இரங்கி நாம் ஒரு செயலேச் செய்தல் வேண்டும். நாம் மனமிரங்கிப் பிறருக்குக் கொடுப்பதே ஈகை யாகும்.

தருமம் பெறுபவர்கள் வறுமையானவர்களே! அவர்களுக்கு உதவுதல் வேண்டும். மற்றவர்களுக்குக் கொடுக்காமல் உள்ளூரில் வாழ்வதைவிட வெளியூருக் குப் போய்விடுவதே மிகச் சிறப்புடையதாக ஆகும்.

ஒரு பொருளே விரும்பி நம்மிடம் பெறலாம் என மிகுந்த ஆர்வத்துடன் வந்தவர்களுக்கு நம்மிடம் உள்ள பொருளேக் கொடுக்காமல் இருப்பது நாணம் தரும் செய்கையாக இருக்காது. ஒவ்வொரு நாளும் இந்தச் செயலே நம்மால் செய்ய இயலுமா? என்ற

அச்சத்தால் நல்ல செயல்களைச் செய்ய வெட்கம் அடைதலும் நாணம் தரத்தக்க குணம் இல்லையாம். ஆனால் நாணம் தரத்தக்க செயல் எது?

நம்மிடம் செல்வம் குறைந்த பொழுது நாம் மிகவும் மெலிந்து, தளர்ந்து, தள்ளாடித் தள்ளாடி நடக்கின்ற பொழுது நம்மைவிட உயர்ந்தவர் நமக்குச் செய்த உதவிகளைப் பற்றிப் பிறருக்குச் சொல்லாமல் ஒளித்து வைத்திருப்பதுதான் நாணம் தரும் செய்தியாகும்.

பிறர் செய்த உதவிகளை நாம் எப்பொழுதும் நன்றியுடன் நினைவு கூறுதல் வேண்டும். நன்றி என்பது யானைத் தந்தம்போல. அது மிகவும் மதிப்புடையது ஆகும்.

மதிப்புடைய செயல்களைச் செய்பவர்கள் மேன் மக்களே! அவர்கள் நெஞ்சத்தில் எப்பொழுதும் உரன் உடையவர்கள். தம் கொள்கையை விட்டுக்கொடுத்து இழிவான செயல்களைச் செய்யமாட்டார்கள்.

இழிவான செயல் செய்கிறோம் எனத் தெரிந்தும் அச்செயலால் அற்ப மகிழ்ச்சியும், மனத் திருப்தியும் ஏற்படுகிறது என போலித்தனமாகச் சொல்லிக் கொண்டு திரும்பத் திரும்ப அந்த இழிவான செயல் களையே செய்பவர்கள் நெஞ்சத்தில் உரம் உடையவர்கள் அல்லர். அவர்கள் சபலத்திற்கு அடிமையானவர்களே!

தாம் செய்யும் செயல் தனக்கு மட்டும் சுகமும் நிம்மதியும் தருகிறது என எண்ணுபவர்கள் தம் பொருளால் தமக்கு வேண்டியவர்களுக்கு ஏதோ ஒருவிதத்தில் உதவிபுரியவே பிறர் பழியையும் தூற்றுதலையும் ஏற்றுக் கொண்டு நடமாடும் இயந்திரங்களாக திகழ்வர்.

அவர்கள் செல்வம் பெற்றிருந்தும் சுதந்திரப் புருஷர்களாகத் திகழமுடியாது. கைவிலங்குடன் காட்டில் கல்லிலும் முள்ளிலும் நடப்பவர்களாகவே இருப்பர்.

'ஆறிலும் சாவு நூறிலும் சாவு' என எண்ணுபவர்கள் வயிற்றுப்பாட்டுக்காக எந்த இழி தொழிலையும் செய்ய முன்வரமாட்டார்கள். அவர்கள், செல்வம் படைத்தோர் பின் செல்லமாட்டார்கள்.

உயர்ந்தோர் என்பவர் தம்மை உபசரிப்பவர்களிடமே உதவிக்குச் செல்வர். தம்மை முன்னே அனுப்பி பின்னே தாம்கேட்ட உதவியைப் பற்றிக் கூறி நம்மை உதாசீனம் செய்வோரிடம் உயர்ந்தோர் நிச்சயம் செல்லமாட்டார்கள்.

உயர்ந்தோர் உலோபிகளிடம் செல்ல மாட்டார்கள்.

பிறரிடம் யாசிப்பதைவிட வறுமையால் வாடுவதே சிறந்த வாழ்வு என எண்ணுவர்.

சிறந்த வாழ்க்கை என்பது ஒருவரிடம் சென்று உதவி கேட்டு அவர் இல்லை என்றதும் தம் உயிரை விடவும் துணிகின்ற வாழ்க்கையே ஆகும்.

சிறந்த வாழ்க்கை வாழ்பவர்கள் எவரையும் பகைத்துக் கொள்ளமாட்டார்கள். எல்லோருடனும் ஒன்றுபட்டு வாழ்வதுதான் நல்லது என எண்ணு வார்கள்.

''ஒன்றுபட்ட வாழ்வே உயர்ந்த வாழ்வு'' கூடி வாழ்ந்தால் கோடி நன்மை பெறுவோம் என எண்ணு வார்கள்.

எப்பொழுதும் ஒன்றுபட்டு பிறர் நன்மைக்காக வாழ தங்கள் உள்ளத்தைப் பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டும்.

நாம் இறப்பது உறுதி.

அடுத்த வீட்டுச் சாவைப் பற்றியும் எண்ணுத வன், தமக்கும் சாவுவரும்—வருவதுஉறுதி என்பதை அறியாதவன் பேதையே ஆவான்.

இறப்பும் ஏமாற்றுதலும்

இறப்பு இந்த மண்ணில் மகான்களை இழுத் தணைத்து இருக்கிறது. அறிஞர்—அரசர்—ஆண்டி என எவரையும் இறப்பு விட்டு வைக்கவில்லை.

இறப்பைப் பற்றிக் கிஞ்சித்தும் எண்ணுமல் பிறரை ஏமாற்றி சுரண்டிப் பொருளீட்டி வாழ்பவன்—

தன்னையே புகழ்ந்து பாராட்டிக் கொள்பவன் பெரிய பைத்தியக்காரனேயாவான்!

பைத்தியங்கள் பலவிதம்!

அந்தப் பைத்தியங்களும் தன்னையே புகழ்ந்து பாராட்டி தற்பெருமை கொண்டு நடமாடுபவன் மிகவும் கீழானவன். அவனுக்கு எவ்வளவு உதவி செய்தாலும் அவன் மறந்து விடுவான்.

இவனைப் போன்றோர் சிறந்த ஒழுக்கமுடன் வாழ தவம்புரிதல் வேண்டும். தவம் புரிந்து வாழும் வாழ்க்கையே சிறந்த வாழ்க்கையாகும். அதுவே உத்தமம்.

நல்ல மனைவியுடன் இருந்து இல்லறம் நடத்துதலே நடுத்தரமானதாகும்.

உலகில் உயர்ந்தோர் பலர்—அறிஞர் பலர் தம் அன்புக் கிழத்தியுடன் அருமையாக இல்லறம் நடத்தியுள்ளனர்.

அண்ணல் காந்தியடிகள் கஸ்தூரிபாயுடன் வாழ்ந்த வாழ்க்கை—திருவள்ளுவர் வாசுகியுடன்—வாழ்ந்த வாழ்க்கை உலகில் பாராட்டக் கூடியதாக உள்ளது.

தமக்குக் கிடைக்காது என்று எண்ணியும் செல்வத்தின்மேல் வைத்த ஆசை காரணமாக தம்முடைய

பெருமையை அறியாதவர்கள் பின்னே திரிந்துகொண் டிருத்தல் கீழ்பட்ட செயலாகும்.

ஆசை காரணமாக நம் பெருமையை நாமே அழித்துக் கொள்ளக்கூடாது.

துறவறத்தின் சிறப்பு

துறவறமே மிகச் சிறந்தது என மகாவீரர் கொள்கையைப் பின்பற்றியவர்கள் எண்ணினர்.

தலையே தவம்முயன்று வாழ்தல் ஒருவர்க்கு
இடையே இனியார்கண் தங்கல்—கடையே
புணராது என்றெண்ணிப் பொருள் நகையால் தம்மை
உணரார்பின் சென்று நிலை.

—இப்பாடலுடன் தவத்தை முதலாகக் கூறி இல்லறத்தை இரண்டாவதாகச் சொல்லி மூன்றுவ தாகத் தம்மை அறியார் பின் திரிதல் கூடாது என் கிறார்.

நம்மை அறிபவர்கள் பின்னே நாம் நடந்தால் தால் நமக்குப் பெருமை.

உலகத்தில் உள்ள புகழ் பெற்றவர் பின்னே— பொருளீட்டலாம், நாமும்சுகம் பெறலாம்எனச் செல்ப வர்கள் முள்குத்தி காலில் அடிபட்டு நிற்பவர்களாகவே திகழ்வர்.

தவமுடைய வாழ்க்கை

புகழ் பெற்ற பெரியோர் பெயர் சொல்லி முதுமையிலும் பொய்யும் புனைசுருட்டுமாகப் பொருளீட்டி, அளவுக்கு மீறி உண்டு பிறர் பொருளை அபகரித்து சுக வாழ்வு வாழ ஆசைப்படுபவர்கள் தவ வாழ்க்கையை எப்படி மேற்கொள்ளமுடியும்?

அவர்கள் இல்லறத்தில் இருந்து மனைவியுடன் வாழ்ந்தாலும் பிறர் பொருளால் சுகம் காண ஆசைப் படுபவர்களே ஆவர்.

எனவே உலகில் எத்தகைய சுகம் ஏற்படினும் தவமுடைய வாழ்வே மிகச் சிறந்த வாழ்வாம் என எண்ணினர் சமண சமயப் பெரியோர்கள்.

நாலடியார் பாடல்கள் சமணர்தம் வாழ்விற்கு நல்ல சான்று பகர்கிறது.

'நாலடி இன்பம்' என்ற நூலில் வித்துவான் திரு. பெ. பழனிவேல்பிள்ளை அவர்கள் மிகச் சிறப்பான கருத்துகளை அள்ளி வழங்குகின்றார்.

"சமண சமயச் சார்புற்ற பெருந்தமிழ்ப் புலவோர்களால் இயற்றப் பெற்ற இந்நாலடிச் செய்யுட்கள் சமண சமயச் சார்புண்மை தோன்றுமாறு, துறவறத்தையே மேம்படுத்திக் கூறுவதோடு அங்ஙனமிய துறவை மேற்கொள்ளாதோர் வாழ்க்கைப் பயனாக அடைய வேண்டுவது அறச்செயலே என்று வலியுறுத்தியும் கூறிச் செல்கின்றன. அங்ஙனம் கூறிச்

சென்ருலும் அவை பல சமயத்தவரும் ஒப்புக்கொள்ளு மாறு அமைந்தனவேயன்ரே?

அங்ஙனம் கூறிச் சென்ருலும்—இதை ஒரு பழம் பாடல் தெரிவித்துச் சொல்வதைக் காண்க.

"ஆலின் அரசின் அசோகின் அணிஇருளின்
மேலே மறையின் விரிந்த பொருள்—நாலடியாம்
வெள்ளாஅண் வேதத்தின் இன்னுரையைக்
கண்டக்கால்
கொள்ளாரோ நல்லோர் குறித்து"

ஆல், அரசு, அசோகு என்னும் மூன்றின் நிழலி லும் வீற்றிருப்போர் சிவன், புத்தன், அருகன் என் னும் மூவருமாவர். அம்மூவரும் மொழிந்த மறைப் பொருளாயுள்ளது நாலடி என்று குறித்துச் சைவரும், புத்தரும், சமணம் ஒப்புக்கொள்ளுமாறு அமைந் துள்ளது நாலடி என்று புலப்படுத்தியமை காண்க என்கிருர்.

சமணத் துறவி கவுந்தியடிகள்

பெண்களும் வீடுபேறும்

"பெண் துறவி தாழ்ந்த பிறவி என்பதும் பாவம் செய்தவர் பெண்ணுய்ப் பிறக்கிருர் என்பதும் சமண

சமயக் கொள்கை" என்கிருர் மயிலை. சீனி வேங்கட சாமி அவர்கள்.

பெண்கள் இல்லறத்தை நீக்கித் துறவு பூண்டு உள்ளத்தை அடக்கி உடம்பை வருத்தித் துன்பங் களைப் பொறுக்கும் பெண் மகளிர்க்கு இல்லாததால், அவர்கள் பெண் பிறப்பில் வீடுபேறு அடைய முடியா தென்றும், ஆனுல் அவர்கள் துறவு பூண்டு மனஉறுதி யோடு வாழ முயல்வார்களாயின் வீடுபேறு அடைய லாம் என்றும் கூறுகின்றனர்.

சமணர்தம் அறிவையும் ஆற்றலையும் சிற்சில மகளிர் உலகிற்கு அருமையாக எடுத்துக் காண்பித் துள்ளனர். அவர்களுள் கவுந்தியடிகள் என்பவர் ஒருவர். அவர் பூம்புகாரின் மேற்கே காவிரிக் கரை யில் அமைந்திருந்த சோலையொன்றில் வாழ்ந்த சமணப் பெண் துறவி. தலையை மழித்து வெண்ணிற ஆடையில் திகழ்ந்தவர். இலக்கண இலக்கியங்களைக் கற்றுத் தேர்ந்தவர்.

உறுதவத்தோர், கழிபெருஞ்சிறப்பிற் கவுந்தி, மாதவத்தாட்டி, தவப்பெருஞ்சிறப்பிற் கவுந்தி, புண் ணிய முதல்வி, மறவுரை நீத்த மாசறு கேள்வி ஆசில் கொள்கை அறவி, இருந்தவ முதல்வி, பொய்தீர் காட்சிப் புரையோர், தவந்தரு சிறப்பிற் கவுந்தி, பொறை சாலாட்டி ஆவர் கவுந்தியடிகள்!

அந்த அம்மையார் உள்ள தவப் பள்ளியில் கோவலனும் கண்ணகியும் உள் நுழைந்து கவுந்தியடி

களை வணங்கி தங்களைப் பற்றிக் கூறியபோது, கவுந்தியடிகள் அவர்களுடன் மதுரை வருவதாகக் கூறி, அங்குக் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கும் மாசற்ற பெரியோர் உள்ளனர், அவர்களிடம் அறவுரை கேட்டு அருகனைப் போற்றி வழிபட வேண்டும் என்கிறார்.

கவுந்தியடிகள் இலக்கியம் போற்றும் அருமைத் தமிழ் சமணத் துறவி. துயருற்றோர்க்கு உதவி செய்யும் மனப்பான்மை கொண்டவர். வாழ்வில் துன்பத்தைச் சுமந்து தன் அருமைத் துணைவி கண்ணகியுடன் மதுரைக்குச் செல்ல வந்தபோது இடையில் தம் தவப் பள்ளியில் நுழைந்தவர்கட்கு அடைக்கலம் தந்தார். ஆதரவு காட்டினார். பரிவுடனும், பண்புடனும் பேசினார்.

மதுரை செல்லும்பொழுது கண்ணகியின் சிறிய அடிகளைப் பரற்கற்கள் உறுத்துமே என மனம் இரங்கினார். இல்லறம் புகுந்து அச்சுகத்தைச் சரியாகத் துய்த்துணராத பெண்மீது, துறவறம் பூண்ட ஒரு பெண் காண்பிக்கும் பரிவைப் பாருங்கள்.

கவுந்தியடிகள் அருகனை வழிபட மிகவும் அவாவியவர்.

அவர் துறவிகட்குத் தேவையான குற்றமற்ற பிச்சைப் பாத்திரம், தோள்மீது இடும் துணிஉறி, மயிற்பீலி ஆகியவற்றுடன் நடக்கின்றார்.

வழியில் சிலர் தலத்தின் மேலிருந்து அருகதேவனின் அறங்களை எடுத்துக்கூறும் சாரணர், கவுந்தியடிகளையும், கோவலனையும், கண்ணகியையும் பார்த்துக் கூறும் வார்த்தைகளைப் பாருங்கள்.

நல்வினையும் தீவினையும்

"தீவினை தன் பயனைக் கொடுக்கும்பொழுது எவராலும் அத்தீவினையைத் தடுக்க இயலாதாம். இதனை போலவே நல்வினையும் நிலத்தில் இட்ட வித்து முளைத்துப் பயன் அளிக்குமாறுபோல் உரிய காலத்தில் வந்து நல்ல பயனை அளிக்கும். இதனையும் தவிர்த்தல் இயலாது. பரந்து வெளியிடத்தில் ஏற்றி வைத்த தீச் சுடரைக் காற்று மோதி அணைத்து விடுதல்போல உடம்பில் இருக்கும் உயிரும் நினையாத நேரத்தில் நீங்கிவிடும். அருகதேவன் ஓதிய வேதத்தின் அருள் ஒளியே பிறவித் துன்பத்தை நீக்கவல்லது" என்கின்றனர்.

நம் பிறவித் துன்பம் நீங்க அருகதேவனின் அருள் ஒளியாகிய வேத மொழிகளே சிறந்தது. நல்வினையும், தீவினையும் நம்மைக் கேட்டு வருவதில்லை. அதைப் போலவே இறப்பும்.

கவுந்தியடிகள் பிறவியைத் தரும் பாசம் நீங்கியவர்.

அவர் பாவ வழியினின்றும் நீங்குங்கள், அவ்வழி துன்பத்தினையே தரும் என்கிறார்.

வழியில் சிலர் தலத்தின் மேலிருந்து அருகதேவனின் அறங்களை எடுத்துக்கூறும் சாரணர், கவுந்தியடிகளையும், கோவலனையும், கண்ணகியையும் பார்த்துக் கூறும் வார்த்தைகளைப் பாருங்கள்.

நல்வினையும் தீவினையும்

''தீவினை தன் பயனைக் கொடுக்கும்பொழுது எவராலும் அத்தீவினையைத் தடுக்க இயலாதாம். இதனை போலவே நல்வினையும் நிலத்தில் இட்ட வித்து முளைத்துப் பயன் அளிக்குமாறுபோல் உரிய காலத்தில் வந்து நல்ல பயனை அளிக்கும். இதனையும் தவிர்த்தல் இயலாது. பரந்து வெளியிடத்தில் ஏற்றி வைத்த தீச்சுடரைக் காற்று மோதி அணைத்து விடுதல்போல உடம்பில் இருக்கும் உயிரும் நினையாத நேரத்தில் நீங்கிவிடும். அருகதேவன் ஓதிய வேதத்தின் அருள் ஒளியே பிறவித் துன்பத்தை நீக்கவல்லது'' என்கின்றனர்.

நம் பிறவித் துன்பம் நீங்க அருகதேவனின் அருள் ஒளியாகிய வேத மொழிகளே சிறந்தது. நல்வினையும், தீவினையும் நம்மைக் கேட்டு வருவதில்லை. அதைப் போலவே இறப்பும்.

கவுந்தியடிகள் பிறவியைத் தரும் பாசம் நீங்கியவர்.

அவர் பாவ வழியினின்றும் நீங்குங்கள், அவ்வழி துன்பத்தினையே தரும் என்கிறார்.

தீய வழியில் சென்று நாம் துன்புறுதல் கூடாது. இன்பம் வேண்டும் என்பதற்காக இன்பத்தைத் தேடியலைந்து துன்பப் படுகுழியில் விழமுடியுமா?

விலக்கமுடியாத வினைப் பயனை அடையும் பொழுது கற்றறிந்த மக்கள் கவலை கொள்ள இயலுமா?

"பிரிதல் துன்பமும் புணர்தல் துன்பமும்
உருவி லாளன் ஒறுக்குந் துன்பமும்
புரிகுழல் மாதர் புணர்ந்தோர்க் கல்லது
ஒருதனி வாழ்க்கை உரவோர்க்கில்லை"

—அறுசுவை உணவும், அன்பு மகளிர் தம் இன்ப உறவுமே எப்பொழுதும் தேவை தேவை என அலைவோம். துன்பம் எல்லையற்றது. இதனைஉணர்ந்த அறவோர் இவற்றின் மீதுள்ள ஆசையை அடக்கியாண்டனர்.

அவ்வாறு அடக்காமல் வாழ்ந்த பலர் துன்பமே கொண்டனர். இன்ப வாழ்வை நாடுவோர் பெருந் துன்பம் அனுபவிப்பது நிச்சயம் உறுதியாகும்.

கோவலன் அடைந்த துன்பம் ஊழின் பெருவலியால் வந்ததாகும் என்பர். யார் தடுத்தாலும் ஊழ் தன் வினையை ஆற்றுமல் ஒழிவதில்லை.

ஊழின் பெருவலி அதிகமே!

கவுந்தியடிகள் புலனடக்கம் மிக்க துறவு வாழ்க்கையை மேற்கொண்டவர். பிற சமயங்கள் மீது காழ்ப் புணர்ச்சி கொள்ளாத அருந்தவச் செல்வி.

ஆடல் பாடல்களில் சிறந்து விளங்கிய மாதவியிடம் மையல்கொண்ட கோவலன் பொருளிழந்து கண்ணகியுடன் தன் சமணப் பள்ளியை நோக்கி வந்த போது அவர்கள்மேல் கவுந்தியடிகள் அன்பு காட்டியதற்குக் காரணம் உண்டு.

பெண்களும் கலைகளும்

சமணம், ஆடல் பாடல் முதலிய கலைகள் சிற்றின்ப நாட்டத்தில் உள்ளத்தைச் செலுத்துவதால் அவை கூடாதென்று கூறியது. ஆருகதம் கலைகளை வெறுத்தது.

இரண்டாவதாக இல்வாழ்க்கையில் சிறப்பிடம் பெறத்தக்க பெண்மக்களைச் சமணம் விரும்பவில்லை.

ஒருவன் யாரையேனும் வஞ்சித்தால் அவன் அடுத்த பிறவியில் பெண்ணுகப் பிறப்பான் என்பது திகம்பர சமயத்தின் கொள்கை என்பர்! இது மிகவும் வேடிக்கையாகும்.

சமணம் பெண் உரிமையை மறுத்தது.

உயிர்கள் வீடுபேறு அடைய வேண்டுமாயின் பாசம் அகலவேண்டும் என்றனர்.

கவுந்தியடிகள் தேன்கலந்த நீரைப் பருக விரும்பாதவர்.

தேன் உண்ணுமை, ஊன் உண்ணுமை, கள்ளுண்ணுமை என்பவற்றைச் சமணர் தம் வாழ்க்கை நெறியாகக் கடைப்பிடித்தனர். அத்துடன் மட்டுமல்ல!

"சமயம் இல்லாத வாழ்வு திசை காட்டும் கருவி இல்லாத மரக் கலத்திற்கு நிகரானது" என்பது ஆன்ருேர் கருத்து.

சமய உணர்வு அற்ற வாழ்க்கை நெறிகெட்டுப் பயனற்றுப் போகும். ஏதேனும் ஒரு சமயத்துடன் தன் வாழ்வைப் பின்னிப் பிணைத்துக்கொண்டு, அச் சமயத்தின் உயர்ந்த கோட்பாடுகளைக் கடைப்பிடித்து வாழ்பவர் ஒழுங்குப்பட்ட வாழ்க்கையை மேற்கொண்டு வெற்றிப் பெறுவர்.

கவுந்தியடிகள் இச்சமய உணர்வைப் பெரிதும் மதித்தார். சமணத் துறவியாக வாழ்ந்து நல்ல ஒழுக்கங்களைக் கடைப்பிடித்து மற்றவர்கட்கு உதவிபுரிய முன் வந்தார்.

தன் சமயப் பற்றில் உரிமை கொண்டவர். பிற சமயத்தாரோடு மிகவும் இனிமையாகப் பழகினர்.

கோவலன் தீய பண்புகள் பலவற்றிற்கு நிலைக்களனுக ஆகி தன் துணைவியுடன் தம்மை அடைந்த பின் அவனை மிகச் சிறந்தவனுக ஆக்கும் பணியை மேற்கொண்டவர் கவுந்தியடிகள்.

தீய குணங்களைக் கண்டு விட்டுவிடவில்லை.

உலகில் மனிதன் திருந்தி வாழ அவனுக்கும் சில சந்தர்ப்பங்கள் உண்டு என எண்ணியவர் கவுந்தியடிகள்.

கவுந்தியடிகள் மிகச் சிறந்த சமணத் துறவி. அகிம்சா தருமத்தைக் கடைப்பிடித்தவர். பொய்யா விரதம் பூண்டவர்.

பஞ்ச நமஸ்காரம்

பஞ்ச நமஸ்காரம் புரிந்தவர். அருகர், சித்தர், ஆசிரியர், உபாத்தியாயர், சாதுக்கள் ஆகியவர்கள் பஞ்ச பரமேட்டிகள் ஆவர். இவர்களில் ஒவ்வொருவருக்கும் சமணர் வணக்கம் செலுத்துவர். அவ்வணக்கத்திற்கே பஞ்ச நமஸ்காரம் என்று பெயர். இதுவே பஞ்ச பரமேட்டிகள் பெயரின் முதல் எழுத்துக்களில் உள்ள உயிரொலிகள் (அ+சி+ஆ+உ+சா) சேர்ந்தே ஓங்காரம் ஆயிற்று என்பர். இதுவே சமணர் கொள்கையாம்.

(உயர் திரு. யோகி, ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் அவர்கள் 'சிலம்புச் செல்வம்' என்ற நூலில் 'கவுந்தியடிகள்' என்ற தலைப்பில் இதை விளக்குகிறார்.)

கவுந்தியடிகள் மிகச் சிறந்த நல்லொழுக்கம் கொண்டவர். இதற்கு ஒரு சான்று பாருங்கள். கோவலனும் கண்ணகியும் கவுந்தியடிகளை நோக்கி வந்தபோது,

> ''உருவும் குலனும் உயர் பேரொழுக்கமும்
> பெருமகன் திருமொழி பிறழா நோன்பும்
> உடையீர்!''

—என்று மொழிகிறார்.

கண்ணகியின் வழிநடைப் பயணம் சிரமம் மிக்கது. அவள் மெல்லடி வருந்தும் என்பதைச் சுட்டுகிருர். தம்மைப் போன்ற பிற பெண்ணின்மீது அடிகளாருக்கு இரக்க உணர்வு ஏற்படுகிறது.

நல்லொழுக்கம் நிரம்பிய அந்த அம்மையாரால் கோவலனையும், கண்ணகியையும் தனியே அனுப்ப இயலவில்லை. மதுரை நகரில் சான்ருேர் உள்ளனர், அவர்களைக் காண நானும் வருகிறேன் என அவர்களுடன் வழி நடக்கிருர்.

கவுந்தியடிகள் நல்ல ஆற்றல் படைத்தவர். அருளறம் பூண்டனர். அருகனின் பல மாண்புகளை உணர்ந்தனர். தம் சமய மெய்ப் பொருள்மீது திண்ணிய பற்று கொண்டவர்.

"ஒருமூன் றவித்தோன் ஓதிய ஞானத்
திரு மொழிக் கல்லதென் செவியகம் திறவா;
காமனை வென்ருேன் ஆயிரத் தெட்டு
நாம மல்லது நவிலா என்நா;
ஐவரை வென்ருேன் அடியிணை யல்லது
கைவரக் காணினும் காணு எண்கண்;
அருளறம் பூண்டோன் திருமெய்க் கல்லது என்
பொருளில் யாக்கை பூமியில் பொருந்தாது;
அருகர் அறவன் அறிவோர்க் கல்லதென்
இருகையும் கூடி ஒருவழிக் குவியா;
மலர்மிசை நடந்தோன் மலரடியல்லது என்
தலைமிசை யுச்சி தான் அணிப் பொருஅது
இறுதியில் இன்பத் திறைமொழிக் கல்லது
மறுதர ஓதிஎன் மனம்புடை பெயராது"

என்ற சிலப்பதிகார வரிகள் கவுந்தியடிகள் சமய மெய்ப் பொருள்மீது கொண்ட பற்றிற்குச் சான்ருகும்.

'சிலப்பதிகாரக் கட்டுரை' என்ற நூலில் திரு. கு. மதுரை முதலியார் அவர்கள் கவுந்தியடிகளைப் பற்றிக் கூறும்பொழுது ''குற்றமற்ற பிச்சைப் பாத்திரத்தையும், தோளில் இடும் உறியையும், மயில் தோகையையும் கொண்டு பொருள் மொழியாகிய தெய்வம் யாம் செல்லும் நெறிக்கண் துணைவருக என்பதைச் சொல்லிப் புறப்பட அவரைக் கோவலனும் கண்ணகியும் தொடர்ந்து சென்றனர்'' என்கிருர்.

'பொருள் மொழி' என்பது இங்கே உபதேச மந்திரமாகக் கருதப்படும். உபதேச மந்திரம் என்பது பஞ்ச மந்திரங்களாகிய அ, சி, ஆ, உ, சா என்பனவாகும்.

இளங்கோவடிகள் தம் சிலப்பதிகாரத்தில் சமணத் துறவிகளின் உள்ளத் தூய்மையையும், விரதத்தையும் சில அடிகளால் விளக்கியுள்ளதைப் பாருங்கள்.

''புலஊன் துறந்து பொய்யா விரதத்து
அவலம் நீத்தறிந்து அடங்கிய கொள்கை
மெய்வகை உணர்ந்த விழுமியோர்...''

சமணத் துறவிகள் புலால் உணவைத் துறந்து, பொய்யா விரதத்தை மேற்கொண்ட புண்ணிய சீலர்கள். அழுக்காறு, அவா முதலிய மாசறு மனத்தினர்,

ஐம்பொறிகளை அடக்கும் ஆற்றல் சார்ந்த அந்தணர். மெய் வகை உணர்ந்த பொய்யில் விழுமி யோர். இத்தகைய அருங்குணமும் அருஞ் செயலும் வாய்ந்த அருகப் பெருமக்களைப் பற்றிச் சீவகசிந்தா மணி கூறும் அருஞ் செய்யுளை நாம் பார்க்கின்றோம்.

> ''ஐவகைப் பொறியும் வாட்டி
> ஆமையின் அடங்கி ஐந்தின்
> மெய்வகை தெரியும் சிந்தை
> விளக்குநின்று எரியவிட்டுப்
> பொய்கொலை களவு காமம்
> அவா இருள் புகாது போற்றிச்
> செய்தவம் நுனித்த சீலக்
> கனைகதிர்த் திங்கள் ஒப்பார்.''

ஆமையின் ஓட்டிற்குள் தன் உறுப்புக்களை அடக்கிக் கொள்வதுபோல ஐம்பொறிகளையும் அடக்கி, மெய்ஞானத்தைத் தெரிவிக்கின்ற மனம் என்னும் விளக்கை எரியச் செய்து பொய், கொலை, களவு, காமம், ஆசை என்கின்ற ஐம்பெரும் பாவங்களாகிய இருள் புகாதபடி — தாம் செய்த தவப்பயனாய் ஒழுக்கச் சீலர்களாய் — திங்களை ஒத்துக் காணப் படுவர்.

கவுந்தியடிகளைப் போலச் சிறந்த பெண் துறவி யாருமல்ல! அவர்களைக் 'குரத்தி' என்பர். குரத்தி என்னும் பெயர் 'குரு' என்பதின் பெண்பாற் பெயர் ஆகும் என்பார்.

இப்பெண் துறவியர் சமய நூலேயும், இலக்கண இலக்கியங்களேயும் நன்கு கற்றிருந்தனர் என்பர்.

கவுந்தியடிகளேப்போல சிறந்த மகளிர் பலர் வாழ்தல் வேண்டும் என அன்றும் எண்ணினர்; இன்றும் எண்ணுகின்றனர்.

ஒருசமயம் சிறந்து திகழ அச்சமயச் சான்ருேர் உயர்ந்த ஞானம் படைத்தவர்களாய், சிறந்த ஒழுக்கச் சீலர்களாய்த் திகழ்தல் வேண்டும். அவ்வண்ணமே அச்சமய கற்பிற் சிறந்த காரிகையர் வாழ்தல் வேண்டும்.

சிறந்த நல்லொழுக்கங்களே மேற்கொண்ட நங்கையர்கள் பலர் பற்பலச் சான்ருேர்களால் புகழப்பட்டுள்ளனர். பெரிதும் பாராட்டப்பட்டுள்ளனர். கவுந்தியடிகளும் அவ்வண்ணமே உயர்ந்த வாழ்க்கை வாழ்ந்து அழியாப் புகழை விட்டுச் சென்றுள்ளார்.

சமணர் வளர்த்த தமிழும் நீதிக் கருத்துக்களும்

"நூற்ருண்டு தோறும் சான்ருேர்களே உயர்த்தி உயரிய நூல்களேப் படைத்துத் தமிழ் வளர்த்துப் புகழ் நிறுவி நின்ற சமண சமயம் பத்தொன்பதாம் நூற்ருண்டிலே வீழ்கதிர் ஞாயிருகி விளக்கம் இழந்

த்து. எத்தனையோ சமண சமயத் தமிழ் நூல்கள் பெயர் தெரியா வகையில் இறந்து போயின. இந் நூற்றுண்டில் சமணரை உள்ளிட்ட யாவருக்கும் அரசியற் செல்வாக்கே சமயம். எந்நெறியிலேனும் பொருளீட்டுவதே சமய ஒழுக்கம் என்று ஆகிவிட்டது. இனிச் சமயம் செய்வதற்குரிய தமிழ்ப் பணியைக் காலம்தான் முடிவு செய்யவேண்டும்'' என 'சமணர் வளர்த்த தமிழ்' என்ற கட்டுரையில் பேராசிரியர் ஔவை சு. துரைசாமிப் பிள்ளை அவர்கள் குறிப்பிடு கின்றுர்கள். (1968-ல் வெளிவந்த உலகத் தமிழ் மாநாடு மலர்.)

சமணர் ஒவ்வொரு நூற்றுண்டிலும், பற்பல நூல் களை எழுதி தமிழுக்கு அணி செய்துள்ளனர். அவர் கள் முயற்சி பெரிதும் பாராட்டத்தக்கது.

அவிநயம், செயிற்றியம், தக்காணியம், அணி யியல், வாய்ப்பியல், மொழி வரி, கட்டிய நன்னியம் ஆக பல நூல்களை எழுதினர்.

யாப்பருங்கலக் காரிகை பிறந்தது. நாலடியார் சமண முனிவர்களால் எழுதப்பெற்றது. கலிங்கத்துப் பரணியை செயங்கொண்டார் பாடினுர். நன்னூல் காண்டிகை உரை தோன்றியது. நேமிநாதம் பிறந்தது.

காரியாசான் இயற்றிய சிறுபஞ்ச மூலமும், கணி மேதையார் இயற்றிய ஏலாதியும் நமக்கு நல்ல அற நூல்களாகத் திகழ்கின்றன.

நாலடியார் கருத்துக்களைப்போல சிறுபஞ்ச மூலக் கருத்துக்கள் நமது சிந்தையுள் பதியத் தக்கன வாகும்.

கண்டங்கத்தரி வேர், சிறுவழுதுணை வேர், சிறு மல்லி வேர், பெருமல்லி வேர், நெருஞ்சில் வேர் ஆகிய ஐந்து வேர்களைப்போல—கொல்லாமை, பொய்யாமை, புலாலுண்ணுமை, கள்ளாமை ஆகியவற்றுடன் பிற அறங்களை ஒன்ருக்கிக் கூறும் நூலாகும் சிறுபஞ்ச மூலம்.

புலால் மறுத்தல்

ஒருயிரைக் கொன்று அதன் தசையைத் தின்ப வனுடைய நாக்கானது அற்றுவிடும் என்கிருர். புலால் மறுத்தல் என்பது இங்கே மிகவும் வற்புறுத்தப்படு கிறது.

"கலிங்கத்துப் பரணி" என்ற ஆராய்ச்சி நூலில் திரு. ந. சுப்பு ரெட்டியார் அவர்கள், "அக்காலச் சமணர்கள் நாள்தோறும் நீராடுவதில்லை. ஆடை உடுப்பதில்லை. தலையை மழுத்திருப்பர். ஒருவேளை தான் உண்பர்" என்கிருர்.

அன்றைய சமணர்போல் இன்றைய சமணர் நாள் தோறும் நீராடாமல், ஆடை உடுத்தாமல் இருக்க இய லாது. காலம் மாறுகிறது.

"இவ்வுலக வாழ்வின் நிலையாமையை நாம் அறிவதற்கு இம்மண்ணுலக வாழ்வினைக் காமத்திற்கு

இரையாக்காமல் முழுமையோடு நாம் அனுபவித்து இன்புறல் வேண்டும். எப்பொழுதும் அகிம்சை நெறியை மேற்கொண்டொழுகுவதே உண்மையான வீரத் தன்மையாகும்.''

நம்முடைய ஆன்மா பண்பட்டு உயர்வு அடைய ஆன்மீக நோக்கம் வேண்டும்'' இக்கருத்துக்களை 'சீவகசிந்தாமணி' என்ற கட்டுரை மூலம் 'தமிழ் வட்டத்தில்' எழுதுகிறுர் திரு. தா. ஏ. ஞானமூர்த்தி அவர்கள்.

''எல்லா உயிர்களுடனும் எனக்கு நட்புறவு உள்ளது'' என்ற மகாவீரரின் குறிக்கோளை எண்ணும் பொழுது நட்புறவின் பெருமை நமக்கு நன்கு புலப் படுகிறது.

நட்புறவற்ற வாழ்க்கை நலிந்த வாழ்க்கையே ஆகும். பிற உயிர்களை நேசிக்கும் மனப்பான்மை நமக்கு வரவேண்டும். பிற உயிர்களை நேசிக்கும் பொழுது அன்பும் இன்பமும் பொங்கிப் பிரவகிக் கின்றன. அன்பற்ற உலகில் இன்பம் இல்லை.

தியாகமும், புலனடக்கமும், அன்பும், கருணையும், சீலமும், நல்லொழுக்கமுமே மகாவீரரின் அறிவுரை களின் சாரம் என்பர்.

உலகில் வாழும் சிறியதும் பெரியதுமாகிய எல்லா உயிர்களும் நம்மைப் போன்றவை! நம் ஆன்மாவின் பல கூறுகளே என்பதை உணர்ந்து கொண்டால்

நாம் எல்லா நலன்களும் எய்தப் பெறுவோம் என்பதில் ஐயமில்லை.

பிற உயிர்களை நம் உயிராக எண்ணும் பரந்த மனம் எழும்போது நாம் உயர்ந்த தியாகிகளாகத் திகழ்கிறோம். தியாகத் தழும்புகளை நாம் ஏற்கும் பொழுது பிறரின் அன்புக்கும் கருணைக்கும் பாத்திரமாகிறோம்.

புலனடக்கமும் விழிப்புணர்வும்

"இவ்வுலகில் புலனடக்கத்தோடு வாழ்பவனே எப்பொழுதும் விழிப்புடன் இருப்பவன்" என்பர்.

புலன்களை அடக்கும் பொழுது நாம் தனிச் சக்தி பெறுகிறோம். உலகின் கண்பார்வைக்கு நாம் தலை சிறந்து விளங்குகிறோம்.

விழிப்புடைய வாழ்க்கை நமக்குத் தேவை.

விழிப்பற்று — புலனடக்கமின்றி நாம் வாழ்கின்ற பொழுது பிழிந்த சக்கையைப் போல் ஆகின்றோம்.

புலனடக்கம் வேண்டுபவன் இம்சை, பொய், திருட்டு, பிறர் மனை விழைதல், இன்பத்தில் ஆசை, பேராசை ஆகியவற்றை விட்டுவிடல் வேண்டும்.

புலனடக்கம் கொள்பவன் பல நன்மைகளை அடைகிறான்.

கோபத்தை அடக்கும் சக்தி அவனிடம் வருகிறது.

தன் நன்மையை விரும்பும் மனிதன் பாபத்தை வளர்க்கக் கூடிய கோபம், மானம், மாயை, பேராசை, என்ற நான்கு தீய குணங்களை அறவே விட்டுத் தொலைக்க வேண்டும்.

கோபத்தை அமைதியினுலும், மானத்தைப் பணிவினுலும், மாயையைக் கபடமின்மையாலும், வெள்ளை மனத்தாலும் பேராசையை மன நிறைவாலும் வெல்லுதல் வேண்டும் என்பர்.

அமைதியுடைய வாழ்க்கை ஏற்படும் பொழுது நம் முன்னேற்றம் மிகச் சிறந்து திகழ்கிறது. அமைதியுடையவனிடம் பல நற்குணங்கள் அவனையும் அறியாமல் வந்து சேருகின்றன.

துறவிகள் அமைதியான வாழ்க்கையை மேற்கொண்ட பொழுது நல்ல கருத்துக்கள் பிறக்கின்றன. மானத்தைப் பணிவினுல் வெல்லலாம் என்பர். பணிவுடையவர்களிடமே இன்சொல் பிறக்கும் என்பர். இன்சொல் பிறக்கும்பொழுது வெற்றி நிச்சயம்.

இன்சொல்லே விளை நிலமாகவும், ஈதலே வித்தாகவும் இருக்கும் என்பர்.

பணிவுடைய மனிதனே பல விதங்களில் உயர்ந்து நிற்கிருன். பணிவற்றவன் பிறர் வெறுப்பிற்கு ஆளாவான்.

கோபத்தினுல் மனிதன் இழிவுறுகிருன். அபிமானத்தினுல் கீழே போகிருன். மாயையினுல் நற்

கதியை இழக்கிருன். பேராசையினுல் இவ்வுலகிலும் மேலுலகிலும் பயந்து கொண்டே இருக்கிருன்.

மனிதன் இழிவடையும் செயலைக் கோபத்தின் காரணமாகச் செய்யலாமா? பிறர் நம்மீது வைக்கும் போலித்தனமான அபிமானத்தால் — கள்ளங் கபடத் தால் நாம் மிகவும் கீழே தாழ்ந்து போகிருேம்.

மாயையினுல் நற்கதியை இழப்போம்.

பயமும் பேராசையும்

பேராசையினுல் இவ்வுலகிலும் மேலுலகிலும் பயந்து கொண்டே இருக்கிருேம் என்பர்.

பேராசையால் மனிதன் சமூகத்தை கேலி செய் கிருன். சமூகத்தின் செல்வம் தன் போலித் தனங் களால் தன்னிடம் வந்து சேர வேண்டும் என ஆசைப் படுகிருன். அவன் மிகவும் ஒழுங்கீனமானவன். பேரா சையால் — அவன் சமூகத்திற்குச் செய்யும் தீங்கால் நிறைய செல்வம் பெற்றுலும் அவன் பயந்து வாழக் கூடியவனே! அவனிடம் தைரியமும் துணிச்சலும் இருக்காது. கோழையைப்போல தன் எஜமானனைக் கை தொழுது கூழைக் கும்பிடு போட்டுத் திரிவான். அவனைக் கண்டு சான்றேர் ஒதுங்க வேண்டும்.

தான் பயப் படுவதை விட பிறரைப் பயப்படச் செய்பவன் அவனே!

பொருளை வவ்வும் எந்த மனிதன், தான் இம்சை புரிந்தும் பிறரைக் கொண்டு இம்சை புரிவித்தும் பிறர்

புரியும் இம்சையை ஆதரித்தும் வருகின்றுனே அவன் தனக்கு விரோதத்தையே வளர்த்துக் கொள்கிருன்.

பிறர் பொருளை விரும்புபவன் பேய்மகன். அவன் பிறருக்கு இம்சை புரிவான். மிகவும் சாதுவைப் போல், சாந்த சீலனைப்போல், பிறர்மீது நன்மை செலுத்துபவனைப் போல் நடித்து பிறர் செய்யும் இம்சையை ஆதரித்தும் வருபன் தனக்கு விரோதத்தையே வளர்த்துக் கொள்கிருன்.

பிறர் புரியும் இம்சையை ஆதரிப்பவன் பிறர் விரோதத்தால் பெருமை இழப்பான். சகல இன்பங்களையும் துறப்பான்.

ஞானமுடைய வாழ்க்கை

''எந்த உயிருக்கும் இம்சை புரியாதிருத்தலே ஒருவன் ஞானி என்பதற்கு அறிகுறி'' என்பர்.

உலகில் எல்லோரும் எப்பொழுதும் ஞானியாகி விட முடியாது. எந்த உயிருக்கும் இம்சை புரியாதிருக்கும் மனமும் வாழ்க்கையுமே நமக்கு வேண்டும்.

பிற உயிர்கட்கு — பிற மனிதர்கட்குத் தொல்லை தந்து வாழ்பவன் அமைதி கெடும். அன்பு அழியும். துன்பம் பெருகும். தூற்றுதல் அதிகரிக்கும். நம்மைக் கொடுமைக் காரனுகப் பார்ப்பர். நாம் அறியாமல் நமக்குக் கொடுமை செய்ய முன் வருவர்.

சிறந்த ஞானம் உடையவன் பிறர் துன்பங் கண்டு மனம் பொறுமுவான். தன்னுல் அவர்கட்கு எப்படியாவது உதவி செய்ய இயலுமா என யோசிப்பான்.

சின்னஞ் சிறிய எறும்பு முதல் பெரிய யானே வரை ஏன் புலிக்கும் சிங்கத்திற்கும் கூட இம்சை செய்யாமல் வாழ்வதே ஞானம் பெறும் வாழ்வாகும்.

''ஊமையை ஊமை என்று சொல்வதும், அலியை அலி என்று சொல்லுவதும், நோயுற்றவனே நோயாளி என்று கூறுவதும், திருடுபவனேத் திருடன் என்று கூறுவதும் உண்மை யாயினும் இவ்வாறெல்லாம் சொல்லுதல் சரியல்ல. ஏனெனில் இதனுல் சம்பந்தப் பட்ட அவர்கள் மனம் நோகும்'' என்பர்.

உலகில் பிறந்தோர் அனேவரும் நிறை வாழ்வு வாழ்ந்துவிட முடியாது. மலர்களில் மணம் கமழும் முல்லேயையும், மல்லிகையையும் படைத்த இறைவன் தான் ஊமத்தம் பூவையும் படைத்துள்ளான்!

ஊமைகளாக, கண் பார்வை அற்றவர்களாக, கால் ஊனமுள்ளவர்களாக, கையிழந்தவர்களாக உலகில் பலர் உள்ளனர். அவர்களே அவர்களின் குறைகளேச் சுட்டிக் காண்பித்து, அவர்கள் மனம் புண்படப் பேசலாமா?

திருடுபவன் திருடித்தான் வாழ்கிறான்!

அவனை 'ஏய் திருட்டுக் கழுதை!' என்பதைவிட திருட்டினால் அவன் அடைந்த அவமானத்தை, இழிவை, அதனால் அவனைச் சார்ந்தோர் படும் வேதனைகளை அவன் மனம் உணரும் வண்ணம் கூறி அவனைத் திருத்த முயல்வதே அறிவுடைமை!

''எவரும் உன்னைக் கேளாத பொழுது பதில் சொல்லாதே. இருவர் பேசிக் கொண்டிருக்கையில் இடையில் புகுந்து எதுவும் சொல்லாதே. ஒருவரைப் பற்றி இன்னொருவரிடம் குறைவாக எதுவும் சொல் லாதே. கபடமாகவும், பொய்யாகவும், புனைந்தும் எவரிடமும் பேசாதே என்பர்.

ஈக்களும் தேனீக்களும்

கபடமாகவும், பொய்யாகவும், புனைந்தும் நாம் நமது நன்மைக்காகப் பேசும் பேச்சுக்கள் சந்தர்ப்பங் களால் நம்மை இழிவு படைத்தவர்களாகப் பிறர் முன் காண்பிக்கும். நம் நன்மை கட்காக நம்மை யோக்கி யர்களாக, நாணமுடையவர்களாக ஆக்கிக் கொள்ள நாம் ஒருவரைப் பற்றி இன்னொருவரிடம் குறைவாகச் சொல்லும் சொற்கள் ஈக்கள் எங்கும் அமர்வதைப் போல ஆகும்.

நல்ல மணமுள்ள மலரில் உள்ள தேனீக்களுக்கும், அசுத்தங்களை நாடிச் செல்லும் ஈக்களுக்கும் நிறைய வேறுபாடு உண்டு அல்லவா?

பிறர் பொருளை நச்சுவதனால் சாவும், சாபமும், கஷ்டங்களும் நம்மைச் சேரும் என்பர். பிறர் பொருளை

விரும்பும் மனம் என்றுமே நமக்கு வரக்கூடாது. பிறர் பொருளை விரும்புவதால் நமக்குப் பேராசைகளே வரும்!

ஆசைகள் வரும்பொழுது துன்பங்களே பெருகும். பிறர் பொருளை நாடும் பொழுது ஒரு பக்கம் நம் பொருள் நம்மை அறியாமலேயே போகும்! நாம் பிறர் வீட்டு எலுமிச்சம் பழத்தை விரும்பும்போது நம் வீட்டு மாம்பழத்தை அணில் கொத்தும். பிறர் பொருளை விரும்புகின்ற பொழுது அற்பர்கள் பலர் சாவுடன் போராடுவர். சிலர் சிலரைச் சாகடிப்பர். எத்தனையோ ஏழை எளிய மக்கள் பிறர் பொருளை அபகரிக்க, வயிற்றுப் பசிக்காகப் போராடும் பொழுது பலியாவர்! திருட்டுக் குற்றங்களுக்காகச் சிறைப் படுத்தப்படுவர்.

துன்பங்கள் பெருகும்பொழுது தூண்டுபவனை விட, தீயச் செயல்களைச் செய்ய முன் வருபவனுக்கே அவன் குடும்பம், அவன் குழந்தைகள் நடுவீதியில் நிற்கும்.

விவேகம் (நல்லறிவு) சுலபமாக வருவதில்லை. விவேகம் பெறுவதற்கு நாம் மிகுதியாகப் பிரயாசைப் பட்டு சாதனை புரிய வேண்டும். சாதகன் புலனிச்சை களை ஒழித்துவிட்டு, மனத்தைச் சமநிலையில் வைத்துக் கொண்டு உலகின் உண்மை நிலையை உணர்ந்து ஆன்மாவைப் பாவங்களினின்று பாதுகாக்கவும், மெய் மறதியின்றி நின்ற இடத்தில் நில்லாது எப்பொழுதும் சுற்றிக்கொண்டே இருக்கவும் வேண்டும்.

நல்லறிவு என்பது நாம் புரியும் சாதனைகளைப் பொறுத்தே உள்ளது.

உலகம் பற்பலத் துறைகளில் பற்பல சாதனையாளர்களை இன்று பெற்றுள்ளது.

சிறந்த விவேகம் உடையவர்கள் புலனிச்சைகளை வெறுத்து உள்ளத்தைச் சமநிலையில் வைத்து, ஆன்மாவைப் பாவங்களினின்றும் பாதுகாத்து, மெய் மறதி இன்றி வாழ்வோர் பலர்! அவர்கள் அனைவரும் 'அர்த்தமாகதி' என்னும் மக்களின் பேச்சு மொழியில் நல்லுரைகளைக் கேட்டவர்களாகவே திகழ்வர்.

ஜைனமும் சமரசமும்

ஜைனத்தின் அடிப்படையான கொள்கை என்ன? ''அஹிம்சை பரமோ தர்மா'' என்பது. தயாமூல தர்மம் என்பதாம். அஹிம்சை என்னும் தயையைப் புறக்கணிக்கும் சமயம் உண்டோ? உளதாயின் அது சமயம் என்னும் பொருளுக்கு உரியதாகாது. தயையுடையாரெல்லாம் சமரச சன்மார்க்கம் சார்ந்தவரே என்றார் இராமலிங்க சுவாமிகள். அஹிம்சை என்னும் தயையை அறிவுறுத்தும் ஜைனம் சமரசமுடைய சன்மார்க்கம் ஆகாதா?'' என்கிறார் திரு. வி. க. அவர்கள். 'திரு. வி. க. வாழ்க்கைக் குறிப்புகள்' என்ற நூலில் இக்கருத்து உள்ளது.

அஹிம்சையைப் புறக்கணிப்போர் இவ்வுலகில் யாரும் இல்லை!

எல்லோருமே தயையுடையவர்கள். அவர்கள் சமரச சன்மார்க்கத்தையும் சார்வார்கள். 'சமணத்தையும் விரும்பி வாழ்த்துவார்கள்!

இல்லற நெறிகள், நான்கு சாதனங்கள்! மும்மூடங்கள், மும்மணிகள்!

இல்லறத்தார் மேற்கொள்ள வேண்டிய இன்றியமையா நல்லொழுக்கங்கள் பற்பல உள்ளன. இல்லறமே நல்லறமாகும். இல்லறத்தில் இருந்து கொண்டு நல்லொழுக்கம் நிரம்பியவர்களாய் கொல்லாமை, ஊனுண்ணமை, மிகுபொருள் விரும்பாமை, கள்ளுண்ணமை, குரவரை இகழாமை போன்ற அறங்களை மேற்கொள்வதற்கு அணுவிரதம் என்பர்.

சமுதாயத்தில் உயர்வு தாழ்வு கற்பிக்காமல் அனைவரும் ஒன்றே என்ற முறையில் வாழுமாறு பணித்தவர் பகவான் விருஷப தேவர் ஆவார்.

தொழில் முறையால் வேறுபடினும் பிறப்பினால் மக்கள் பலரும் ஒரு குடும்பத்தினர் போன்றவர்கள். ஆகையால் அவர்தம் அறநெறி அன்பின் அடிப்படையில் மக்கள் சமுதாயத்திற்கே உரியதாக அமைந்திருக்கிறது.

சமணர் கடைப்பிடித்த இல்லற நெறிகள் மிகவும் சிறப்புடையதாகும்.

பிற உயிர்களைக் கொன்று அவற்றின் ஊன் உண்ணும் பழக்கம் எத்தனை கொடியது. எவ்வளவு அநாகரிகமானது, என்பதை அவர்கள் முற்றிலும் புரிந்து கொண்டுள்ளனர்.

நம் வாழ்க்கைக்கு உண்மை உழைப்பால் கிடைக்கும் ஊதியமே மிகச் சிறப்புடையது ஆகும். அதிகப் பொருளை அநியாய முறையில் ஈட்ட முயற்சிப்பது சிறந்த ஒழுக்கமில்லை என எண்ணினர். தேவைக்கு அதிகமாகப் பொருளீட்டி, அதைப் பூதம்போல் காக்கும் குணம் மிகவும் கொடியது என உணர்ந்தனர்.

கள்ளுண்ணுமையும் அப்படியே! கள்ளால் எத்தனைக் குடும்பங்கள் அழிகின்றன. எத்தனைக் கற்புடைச் செல்வியர் சோக கீதம் இசைக்கின்றனர். மதுவின் கொடுமை மிகவும் பயங்கரமானதல்லவா! கள்ளுண்ணு மாந்தர் வாழ்வு கற்கண்டினும் சுவை மிக்கதாகும்!

குரவரை இகழாமையும் அப்படியே! நம்மினும் அறிவில் சிறந்தோரை — ஆசிரியர்களை —பெரியவர்களை ஏன் இகழவேண்டும்? பிறரை இகழும் பண்பு மிகவும் இழிந்ததல்லவா?

சமுதாயத்தில் அனைவரும் ஒன்றே! ஏற்றத் தாழ்வு என்பது கூடவே கூடாது. இக்கருத்தை நாம் மிகவும் சிறப்பாக மதித்தல்வேண்டும். தொழில் முறையால் வேறுபடினும் பிறப்பினுல் மக்கள் பலரும் ஒரு குடும்பத்தினர் போன்றவர்கள் என்பது மிகவும் வரவேற்கத்தக்கக் கருத்தாகும்.

இல்லறத்தாரின் தானங்கள்

இல்லறத்தார் கடைப்பிடிக்க வேண்டிய நான்கு தானங்கள் மிகவும் சிறந்ததாகும். அன்னதானம், அபயதானம், மருந்துதானம், கல்விதானம் என்பது.

அன்னதானம் என்பது பிறர் பசித்திருக்க நாம் புசிக்க மாட்டோம் என்பது. தானங்களுள் சிறந்தது நிதானமே என்பர் சிலர். ஆனுல் தானங்களுள் மிகச் சிறந்தது அன்னதானமே எனப் பலர் கூறுவர்.

ஏழ்மையும், இல்லாமையும் உலகம் தோன்றிய நாள்தொட்டே இருக்கின்றன. எம்மதத்திலும், எச் சமயத்திலும் ஏழையரும், இல்லாதோறும் உள்ளனர். வறுமையின் கொடுமையால் பாலுக்குப் பல சிசுக்கள் வாடிடும் காட்.சி இன்றும் உள்ளது.

குழந்தைகட்கும் முதியவர்கட்கும் பசிப்பிணி போக்கும் அறம் மிகவும் உயர்ந்ததாகும். இல்லறத்தில் இருந்து விருந்தோம்பி வாழும் வாழ்வே மிகவும் உயர்ந்ததாகக் கருதுவர்.

அப்படியே அபயதானமும்! தன்னிடம் அடைக்கலம் புகுந்த புருவிற்குத் தம்முடைய தசையை அரிந்து கொடுத்த சிபிச் சக்கரவர்த்தியைப் போல நாம் இருத்தல் வேண்டும். நம்மிடம் தஞ்சம் புகுந்தவர்களை நம் உயிர் கொடுத்தேனும் காப்பாற்றும் பழக்கம் பலருக்கு வருதல் வேண்டும். "நம்மால் பல உயிர்களைக் காப்பாற்ற இயலுமா?" என என்றும் எண்ணுதல் கூடாது!

நம்மினும் தாழ்ந்தவர்கட்கு—நம்முடைய உதவியைப் பெரிதாக எண்ணி நம்மை நாடி வந்தவர்கட்கு நாம் உதவி செய்தல்வேண்டும். பிறர் துன்பங்கட்கு, துயரங்கட்கு ஆறுதல் கூறி அவர்களை இரட்சிக்கும் வாழ்வே மிகச் சிறந்த வாழ்வு!

மருந்து தானமும் அப்படியே! நம்மிடம் மிகுந்துள்ள மருந்துகளை வங்கிகளில் (Banks) வைத்துள்ள மருந்து பெட்டிகளில் போடுங்கள் என இன்றும் எழுதி வைத்திருப்பதை நாம் பார்க்கலாம்.

மருத்துவமனைகளில் பல்லாயிரக்கணக்கான ஏழை எளிய மக்கள் மருந்து வாங்கப் பணமின்றிப் படும் துயரை நாம்பார்த்து வருகிறோம். இரத்ததானம் செய்வதும் தேவையே.

நோயாளிகட்கு மருந்து வாங்கித் தரும் பழக்கம் அன்றும் இருந்தது. இன்றும் வேண்டும்.

கல்விதானமும் அப்படியே!

"எழுத்தறிவித்தவன் இறைவன்ஆவான்" என்பர். பலர் மாணவ மாணவியர்கள் கல்விக்குச் செலவழிக்கப் பணமின்றி சிறிய வயதிலேயே குற்றவாளிகளாகத் திரிகின்றனர். சிறுபிள்ளைகளைத் திருத்த சிறைச்சாலைகளும் நம் நாட்டில் இன்று உள்ளன.

கல்விதானம் இருப்பின் உலகில் நல்லொழுக்கம் வளர வாய்ப்பு உண்டு. விஞ்ஞானம் பெருக வழியுண்டு.

இத்தகைய நல்வழிகளை இல்லறத்தார் மேற்கொள்ள மறுப்பார்களாயின் அவர்களிடம் மூட நம்பிக்கைகள் மலிந்துள்ளன எனலாம்.

மூன்று மூடங்கள்

தேவமூடம், உலகமூடம், பாசண்டி மூடம் என நம்பிக்கைகள் மூன்று வகைப்படும்.

தேவமூடம் என்பது தன்னைத் தெய்வம் வாழ்விக்கும் என மயங்கி அதனை வழிபடுதலும், கோபமும் கொடூரமும் வாய்ந்த தெய்வங்கள் உண்டென அச்சங்கொண்டு வணங்குதலும் ஆகும்.

தமது ஏமாற்றுத் தனங்களுக்கும், தனது சோம்பேறித் தனங்களுக்கும் தெய்வத்தின்மீது பழிபோடுதல், அத்துடன் தன் இயலாமையை, தனது முயற்சியற்ற தன்மையை வெளியே காண்பித்துக் கொள்ளாமல் இருக்க தெய்வத்தை வழிபடுதல் உண்டு.

கோபமும் கொடூரமும் வாய்ந்த தெய்வங்கள் உண்டென அச்சங்கொண்டு வியப்பிற்கும், வேடிக்கைக்கும் உரியதாகும்.

தன்னம்பிக்கையற்ற மனிதன் பிற சக்தியிடம் அஞ்சுகிருன். கோபத்தையும், கொடூரத் தன்மையையும் விட்டொழிக்கவேண்டும் என எண்ணுமல் தெய்வங்களிடம் அதை எதிர்பார்த்து அஞ்சி நடுங்குகிருன். அச்சம் என்பது நம்மிடம் தலைதூக்கி நிற்கும் வரை நாம் அடிமையாக வாழ்ந்தே ஆக வேண்டும்.

உலக மூடம் என்பது புண்ணியம் பெறலாம் என மலைமீது ஏறி வீழ்ந்து இறத்தலும், கற்பனையாக உலகில்கூறும் பல போலிக் கொள்கைகளை ஆராயாமல் நம்பிப் பின்பற்றுவதும் ஆகும்.

பாவம் புண்ணியம் ஆகியவற்றில் நம்பிக்கை கொண்டு மலைமீதேறி கீழே விழுந்தால் புண்ணியம் பெறலாம் என எண்ணுவதும் பேதைமையாம். மலைமீது உயர்ந்த ஞானம் பெற தவசிகளும், யோகிகளுமே செல்வர். மலைக் குகைகளில் எங்காகிலும் அமர்ந்து ஞானம் பெற முயற்சிப்பர். ஆனுல் அங்கிருந்து கீழே விழுந்து இறந்தால் எப்படிப் புண்ணியம் பெறமுடியும்?

புண்ணியம் என்பது கீழே மண்ணில் புதைத்து வைத்திருக்கும் புதையலா?

கற்பனையாக உலகில் கூறும் பல போலிக் கொள்கைகளை ஆராயாமல் நம்பிப் பின்பற்றுவதும் மூடத்தன்மை என்பது முற்றிலும் உண்மையாகும்.

மனிதன் பல போலிக் கொள்கைகட்கு அடிமை யாக ஆசைப்படுகிருன். அதற்காக நிறைய செலவழிக் கவும் விரும்கிருன்.

உலகம் இன்று போலித் தன்மையையும், போலி மனிதர்களையும் நம்புகிறது. எந்தத் தீய சக்தியையும் ஆராயாமல் அதற்கு அடிபணிகிறது.

பாசண்ட மூடம் என்பது துறவுகளுக்குரிய அற நெறிகளைப் பின்பற்ருமலும் தியாகமும் அறிவும் இன்றித் தன்னலங் காரணமாகத் துறவி வேடம் புனைந்து ஏமாற்றும் போலித் துறவிகளைக் கண்டு வணங்கி வாழ்த்துப் பெறுதல் ஆகும்.

துறவிகள் என்போர் மிகச் சிறந்த வாழ்க்கை வாழ்தல் வேண்டும். கவுந்தியடிகளைப் போன்ற நல்ல இலக்கண இலக்கியங்களைக் கற்று, சமணக் கொள்கை களை இம்மியும் பிசகாமல் கடைப்பிடித்து வாழ்பவரே உண்மைத் துறவிகள்.

சுயநலத்திற்காக தியாகமும் அறிவும் இன்றி தன் னலம் காரணமாகத் துறவிவேடம் புனைந்து ஏமாற்றும் போலித் துறவிகளைக் கருத்து மயங்கி நாம் வாழ்த்தி வணங்கலாமா?

துறவிகள் என்போர் தூய்மையான பசுவின் பால் போன்றவர்கள். அவர்களிடம் உண்மையும், மென்மையும், அன்பும், அகிம்சையும், தயையும், தாட்சண்யமும், தியாகமும், தூய்மையும் இருத்தல் வேண்டும்.

வயிற்றுப் பிழைப்புக்காக போலித் துறவியாய் நடிக்க முற்படுபவர் புலால் உண்பார். பொய் பேசுவார். மதுஉண்பார். பிறர்மனை நாடுவார். மிகுபொருள் விரும்புவார். இவரை நாம் துறவியாக எப்படி எண்ண முடியும்?

மூன்று மூடங்களினின்று நீங்கியவனே அறிவு உடையவன் என்பர். அவனே மயக்கமற்ற மாசறு காட்சியுடையவன்.

சமணமும் ஆன்மீகமும்

சமண அறவோர் ஆன்மீகத் துறைக்கும் வழி கோலினர். அவர்கள் நற்காட்சி, நல்ஞானம், நல்லொழுக்கம் என்னும் முன்று மணிகளை வழங்கினர்.

நற்காட்சி என்பது உண்மைப் பொருளை ஆராய்ந்து அறிதலாம்.

''மெய்ப்பொருள் தேறுதல் நற்காட்சி
என்றுரைப்பர்
எப்பொருளும் கண்டுணர்ந் தார்''

—என அருங்கலச் செப்பு இயம்புகிறது.

உலகம் உண்மைப் பொருளை அறிய அவாவுகிறது. உண்மைக்கும் நேர்மைக்கும் நியாயத்துக்குமே சான்ருேர் தலை வணங்குவர். உண்மைப் பொருளை ஆராய்ந்து அறியவில்லை என்ருல் கெடுதலே நேரிடும்.

அதைப் போலவே நூற் பொருள்களின் உண்மை அறிதல் வேண்டும்.

''எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும்
அப்பொருள்
மெய்ப் பொருள் காண்பது அறிவு''
— என்ற திருக்குறள் நற்காட்சிக்குச்

சான்ருகும் என்பர்.

நாம் பிறரிடம் இருந்து கேட்கும் செய்திகளில் உண்மையை உய்த்துணர முயலல் வேண்டும்.

நூற்பொருளில் அறிவைச் செலுத்துதல் நல்ல ஞானம், என்றும் அப்பொருளின் வழி ஒழுகுதல் நல்லொழுக்கம் என்றும் கூறுவர்.

சமணமும் பசு பாதுகாப்பும்

பிறஉயிர்களைக் கொல்லாமை விரதம் மிகவும் போற்றிப் பாதுகாக்கக் கூடிய ஒன்றாகும். இன்று பசு பாதுகாப்பு — பசுக்களைக் கொடுமை செய்யா திருத்தல் மிகவும் தேவையான ஒன்றாகும்.

பசுவைக் காப்பதாலும், அதை அவ்வாறு காக் காமல் விட்டுவிடுவதாலும் நமக்குப் பெருமையும், சிறு மையும் உண்டாகின்றன.

ஒரு வீட்டின் மங்கலமே விளக்கும், பசுவை வைத்துப் பாதுகாத்தலுமே சிறப்பு என்பர். சின்னஞ் சிறு சிற்றூர்களில் ஒவ்வொரு வீட்டிலும் ஒவ்வொரு பசுவேனும் இருக்கும்.

பசு பாதுகாப்பு

பசுவைப் பாதுகாத்து அதைப் போற்றிப் புகழும் நாடு நம் பாரத நாடு. எல்லோரும் எம்மதத்தினரும் பசுவைப் பாதுகாத்துள்ளனர்.

பசுவைத் தமது உணவுப் பொருளாக எண்ணி அதை வதை செய்யும் கொடுமை மிகப் பெரிதாம். அதை அவ்வாறு செய்யாதிருத்தலே நாம் செய்யும் பெரும் புண்ணியமாகும்.

பசுவின் குருதி ஒரு துளி நிலத்தில் வீழ்வதாயின் அதினின்றும் பலகோடி அசுரர்கள் வந்து உதித்து உலகை நாசம் செய்வர் என்னும் உண்மையை சமய நூல்கள் கூறுகின்றன.

பசுக்களிடம் கருணை இல்லாதவர்களும், பசுக் கொலை புரிபவர்களும், பசு இறைச்சி உண்போரும் மிகவும் பாவிகளே! அவர்கள் நம்முடைய மதிப்பிற்கும், பெருமைக்கும், சிறப்பிற்கும் உரியவர்கள் ஆக மாட்டார்கள்.

அவர்கள் மிகவும் கொடியவர்கள்.

மூர்க்கத் தன்மை படைத்தவர்கள்.

அத்தகைய கொலைஞர். புலையர்களிடம் பசுக்களை யாவது, அதன் கன்றுகளையாவது விற்பது மிகவும் தீமையுடைய செயலாகும்.

நாமே நாம் பெற்ற குழந்தையைக் கொண்டு போய் கொலைகாரனிடம் கொலை செய்யக் கொடுப்பதைப் போன்றதாகும்.

விலைக்குப் பெற்றவன் செய்யும் பாதகத்திற்கு விற்றவனும் பொறுப்பாளியாவான். நாம் பிறரிடம் ஒரு பொருளைக் கொடுக்கும் பொழுது வாங்குபவனும் நன்றாக இருக்க வேண்டும். விற்றவனும் மன நிம்மதியோடு வாழ வேண்டும் என இருத்தல் வேண்டும்.

பாவம் எது—?

நோய் கொண்ட பசு, மூப்பெய்தியபசு, இளைத்த பசு, முதலியவற்றை விற்பது, அதனால் வரும் சிறு ஊதியத்தைப் பொருளாக எண்ணுவதும் பாவ மாகும்.

நாம் நம் நல்வாழ்விற்காக இத்தகைய பசுக்களை பிறருக்கு ஏமாற்றி விற்பது மிகவும் தீமையாகும். அவற்றையும் பால்வற்றியபசுக்களையும் உடையவர்கள் தாமே வைத்துக் காப்பாற்றி வருதல் கடமை யாகும்.

நாம் நம் குழந்தைகள் நோயுற்றாலோ — நம்மைப் பெற்றவர்கள் மூப்புற்றாலோ – நம் குழந்தைகள் சூம்பிப்போய் இளம்பிள்ளை வாதத்தால் முடக்குண் டாலோ அவர்களை நாம் நம்முடன் வைத்துக் கொண்டு வாழாமல் மற்றவர்கள் வீட்டிற்கு அனுப்பி விடுகின்றோமா?

பசுவும் நம்வீட்டுப் பொருள் தானே?

அது வாயில்லா ஜீவன் என்ற ஒரே காரணத் திற்காக அதை வதை செய்வதும் – விற்பதும் நம் முயற்சியாக இருக்க வேண்டும்? சில சமயங்களில் அது நோயின் உபாதையாலும், தான் படும் சிரமங் களாலும் கண்களின் ஓரத்தில் நீர் கசியச் செய்வதை நாம் பார்த்திருப்போமே!

நம்மால் அந்தப் பசுக்களைப் பாதுகாக்க இயலா விடில் கூடியவரை அதைப்பாதுகாக்க முன்வரு பவரிடம் ஒப்படைத்தலே சிறப்பு.

தனியே ஒருவராக பசுவைக் காக்க இயலாதவர் கள் — பலர் ஒன்று கூடி பசு காக்கும் சாலை நியமித்து அதன்மூலம் அவைக்காக்க முயல்வது பெருங் கடமை யாகும்.

ஊர்ப்புறங்களில் பசுக்கள் மேயபுல்லுள்ள இடங்களை உண்டாக்குதல் வேண்டும். நாள் தோறும் காலை வேளை களில் ஆயர்குலச் சிறுவர்கள் மாடுகளை ஒன்று சேர்த்து அவைகளை மேயச் செல்ல அழைத்துச் செல்லும் காட்சி பார்ப்பதற்கு எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கும்.

பசுக்கள் நமது அன்பிற்கு உரியவைகள் பாது காக்க மனமின்றி கொடுமை செய்ய எண்ணுவதும் பேதைமையாம்.

பூச்செடிகளை வளர்க்க ஆரம்பித்தபின் அதற்குத் தண்ணீர் ஊற்றுமல் அவைகளை வாடிப் போகச் செய் வது எவ்வளவு கொடுமை.

"யாவர்க்கு மாம்பசுவுக்கொரு வாயுறை" என்று திருமூல தேவர் திரு மந்திரம் அருளினர்.

பசுக்களைத் தொட்டாலே நம் தீட்டு போகும் — தீவினை குறையும் — வெல்வம் பெருகும் — செழுங்கிளை வாழ்த்தும் என்பர்.

பசுக்கள் தங்கும் சாலைகள்

பசுக்கள் தங்கும் சாலைகளை விதிப்படி அமைத்தல் வேண்டும். அதனுள் ஆற்றுமண், புற்றுமண், ஓடை மண், அரச மரத்தடிமண், வில்வத்தடிமண் முதலிய தூயமண்ணினால் நிலம் செய்தல் வேண்டும்.

இளங்கன்று, முதிர்கன்று, நோய்க்கன்று என்பவற்றிற்கு வெவ்வேறு இடங்கள் அமைக்க வேண்டும்.

நாள்தோறும் அவ்வப் பொழுது கோவிலை கோமயங்களை அப்புறப்படுத்தி இடத்தைச் சுத்தம் செய்தல் வேண்டும். நாம் மட்டும் நாம் வாழும் இடத்தைச் சுத்தம் செய்து நாம் பாதுகாக்க அழைத்து வந்த ஜீவனை அலட்சியப்படுத்தலாமா?

நமக்கு நல்ல படுக்கை இல்லை என்றாலும், நம் வீட்டிற்கு நம்மைத்தேடி நள்ளிரவில்வரும் விருந்தினருக்கு நல்ல படுக்கைத் தர நாம் விரும்புவதில்லையா?

பசுக்களுக்கு நாம் அன்போடு புல்லைக் கொடுக்க வேண்டும்.

நோயுற்ற பசுக்களுக்கு வேறிடம் செய்து அதற்கு மருந்து வாங்கித் தரல் வேண்டும்.

இளைத்த பசுக்களுக்கு நாம் மனமிரங்கி அதை வாங்கி வளர்த்தல் பெரும் புண்ணியமாகும்.

“அட்டமி நாள்தோறும் பசுக்களை நீராட்டிப் பூச் சூட்டி சோறும் நீரும் தந்து புகையும் விளக்கும் காட்டிப் பூசித்து வணங்குதல் வேண்டும்” என்பர் சைவர்.

வேனிற் காலத்தில் சோலைகளிலும், மழைக்காலத் தில் மலைச்சாரல் வனங்களிலும், பனிக் காலத்தில் வெய்யில் மிகுந்த வெளிகளிலும் துன்பம் வராதபடி பசுக்களை நல்ல புல் உள்ள இடத்தில் மேய்த்துத் தூய நல்ல நீர்த்துறைகளில் நீராட்டுவித்தல் வேண்டும்.

கன்று பால்குடித்து, தாயின் பால் காம்பை விடுத்தபோது அதை நீரினால் கழுவிக் கறத்தல் வேண்டும். பேராசையால் கன்றுக்குப் பால்விடாமல் கறப்பவர்கள் மிகுந்த துன்பம் அடைவர்.

தங்கட்கு தாகம் ஏற்பட்டபொழுது ஒரு குவளை நீரும், கிடைக்காமல் துன்புறுவர்.

பிறருக்குக் கொடுக்க வேண்டும்.

கொடுக்கின்ற பழக்கமே உயர்ந்த பழக்கம்.

கன்றுக்குப் பால் தராமல் பசுவின் பால் கறப் போன் நரகத்தில் வீழ்ந்து நெடுங்காலம் வருந்திப் பின்பு 'பூமியில் பிறந்து கடும் பசியினலே வருந்தி

வீடுகள் தோறும் பிச்சை எடுப்பார்களாம். பிச்சை ஏற்கினும் கிடைக்காமல் வருந்துவர் என்பர்.

பசுக்களைப் பகைவர் கவர்ந்தால் எதிர்த்தல் வேண்டும்.

பசுவைப் பாதுகாப்பதும் பசுவிற்கு வேண்டியதைச் செய்வதுமே நமக்கு உயர்வுடைய வாழ்வாகும்.

சமணர் பலர் பல ஊர்களில் இன்று பசு பாதுகாக்கும் இடமாக 'கோசாலா' எனஏற்படுத்தி அதற்கு அகத்திக் கீரை தானமாக இடும் பழக்கம் மேற்கொண்டுள்ளார்கள். இது மிகவும் வரவேற்கக் கூடியதாகும்.

அறிவுரையும் அறநெறியும்

அருக சமயத்து அறிஞர் முனைப்பாடியார் முத்துக்களைப்போல் பற்பல நீதிக்கருத்துகளைச் சொல்கிறார். அருக சமயத்தோர் வாழ்வில் மட்டும் கடைபிடிக்க—பின்பற்ற வேண்டிய கருத்துகள் அல்ல; எல்லோருக்குமே ஏற்ற கருத்துகள்.

அறநூல்களால் நாம் ஆறு பொருள்களைப் பற்றி அறியலாம் என்கிறார்.

ஒழுக்க நெறியினை விளக்கி ஒப்பற்ற—உயர்ந்த—செம்மார்ந்த வாழ்க்கை வாழ்ந்து, அறநூல்களை உணர்ந்து அருகனும், மெய்நூலும், துறவியும், உண்மைப் பொருளும், வாழ்வின் துணிவும் அருகனிடத்து அன்பும் கொண்டு வாழும் வாழ்க்கையைச் சிறப்பிக்கின்ருர்.

ஆசைமிக்க ஆசிரியர்கள்

ஆசை மிகுந்தவர்கள் ஆசிரியர்களாக இருக்க மாட்டார்கள். சிறு வீட்டையும், ஒரு மாளிகைகளையும், பார்த்து ஆசைப்படும் ஆசிரியர்களை நாம் வழிபடுதல் அவசியமல்ல என்கிருர்.

நடிக்க வந்த இடத்தில் தன் பிழைப்புக் கருதி வருத்தமுடன் நிற்கின்ருன் ஒருவன். அவன் அப்பொழுது அரசனுக வேடமிட்டுள்ளான்.

அவனுடைய அரச வேடத்தைப் பார்த்து அந்த வேடத்தில் மயங்கி, ஊரார், அவனைப் பார்த்து, "தங்களை ஆள்க" என்று கூறி அவர்கட்குப் பணி செய்தலைப் போல ஆசைக்கு அடிமையான ஆசிரியர்கள் என்கிருர்.

ஆசைகள் நம் உள்ளத்துள் தோன்றும்பொழுது, "உண்மை எது? பொய் எது?" என நம்மால் உணர முடிவதில்லை. நாம் மயக்கத்திற்கும் மாயங்கட்கும் அடிமையாகிறோம்.

உலகம் நல்லவர்களை நம்புவதில்லை.

அரசனாக வேடம் பூண்டவனையே சிறந்த ஆட்சியாளனாக மதிக்கிறது.

இத்தகைய வேடதாரிகளிடம் நற்குணங்கள் மலிந்திருக்கும் என்பது எப்படி உண்மையாகும்? நற்குணம் இல்லாதவர்களை நாம் உயர்ந்தோர்களாகக் கருதமுடியுமா?

குணமும் பாலின் தூய்மையும்

உயர்ந்தோர் என்போர் யாவர்?

சிறந்த அறவழியில் நின்று—அன்பு மயமான வாழ்க்கை வாழ்ந்து தன்னலம் கருதாமல் பிறர் நலம் கருதி பிறருக்குத் தொண்டு புரிபவர்கள்தானே?

நற்குணம் இல்லாதவர்களை நாம் போற்றி துதித்து அவர்களால் புண்ணியம் பெறுவோம் என எண்ணுவோர் மாட்டுப் பசுவை மிகவும் போற்றிப் பாதுகாத்து அதனால் பாலைப் பெறலாம் என எண்ணுபவர்களே யாவர்!

பாலின் தூய்மையைப் போல நற்குணம் உடையவர்களாக இருத்தல் வேண்டும்!

பாலின் சுவைபோல நமக்கு அறுவகைப் பெரியோர்கள் நம்மைச் சூழ்ந்திருப்பர். அவர்கள் அழுக்கற்ற குணநலனும் சாதிநலனும் உடையவர்கள்,

பெரியோர் யார்

மன்னனும், நம்மைப் பெற்றதால் உயர்வு பெற்ற தாய், தந்தையரும் கருதியதை முடித்துவிடும் ஆற்றல் பெற்ற துறவியும், ஆசிரியரும் அவர் மனைவியும் ஆகிய இக்குரவர்களே பெரியோர்.

இவர்கள் எண்வகைச் செருக்கை அழிப்பவர்கள். இந்த உலகஇன்பத்தைப் பற்றிக் கொஞ்சமும் பொருட்படுத்தாதவர்கள்.

அவர்கள் அறிவாலும், புகழாலும் உயர்ந்த பிறப்பாலும் மிக்க வலிமையாலும், நல்ல தவத்தாலும் உயர்ந்த செல்வத்தாலும் நல்லூழாலும் உடல் அழகாலும் எம்மைப் போன்றவர் இல்லையென்று கூறி செருக்குடன் திரியமாட்டார்கள்.

அறிவையும், புகழையும், செல்வத்தையும் மிகவும் சிறப்பாகவே கொள்வர்.

நல்ல தவம் அவர்களை மேன்மைப்படுத்தும்.

நற்காட்சியின் சிறப்பு

நல்ல தவமுடையவர்கள் நற்காட்சிக்குரிய எண்வகை உறுப்புகளைப் பெற்றவராவர்.

சந்தேகமும், ஆசையும், வெறுப்பும், மயக்கமும் ஆகிய இவை இல்லாமல் இருத்தல்வேண்டும். பழியானவற்றினின்றும் உள்ளத்தை மீட்டலும் மனமொழி

மெய்களை நன்னெறியில் நிறுத்துதலும் உயிர்களிடத்து மாருத அருளுடைமையும் சிறந்த அறத்தினைப் பலர்க்கும் விளக்குதல் ஆகியவை நற்காட்சிக்கு உரிய அங்கங்கள் ஆகும்.

நற்காட்சி மனஅமைதியால் உண்டாகும் அரிய கடவுள் தோற்றம் ஆகும்.

மனஅமைதியான செயல் ஒன்றை நாம் செய்யும் பொழுது அதனுல் ஏற்படும் மகிழ்ச்சியைப்போல் வேறு ஏதும் இல்லை.

மனஅமைதி மனிதனுக்குத் தேவை.

அமைதியின்றி அவன் ஈட்டும் பொருளும் புகழும் பயனற்றவை ஆகும். மனஅமைதியால் நாம் உண்மைப் பொருளை அறியலாம்.

''மெய்ப் பொருள் தேறுதல் நற்காட்சியென்றுரைப்பர். எப் பொருளும் கண்டுணர்ந்தார்'' என்ற 'அருங்கலச் செப்பு' செய்யுளால் நாம் நற்காட்சியைப் பற்றி அறியலாம்.

நன்னெறியின் சிறப்பு

எப்பொருளையும் கண்டு தெளிபவர்கள் நன்னெறியில் நிற்க முயல்வர். அப்படி நிற்பவர்களைவிட வேருன தெய்வம் ஒன்றும் இல்லை. நன்னெறியில் எவ்விதத்திலும் நிற்காதவர்கள் மிகவும் தாழ்ந்தவர்

களேயாவர். அவர்களைவிடத் தாழ்ந்தோனுகச் செய்பவனும் அவனே!

''நெறி நில்லானேல் அவனிற்ருழ்ந்தது வேருென்றில்லை'' என்பர்.

நன்னெறியில் நிற்பவனே உயர்ந்தவன்—சிறந்தவன்—பெருமை மிக்கவன்.

அவனே தன்னலமற்ற பெரியவன் ஆவான்.

அறம் வளர்க

ஒவ்வொரு நாளும் அறத்தினைத் தானே வற்புறுத்திக் கூறி, மிக அடங்கியிருக்குமாறு செய்யக் கருதி அடக்கியாளும் பெரியவர்கள் காலையும், கையையும் ஆட்டாதவாறு இறுகப் பற்றிக் கொண்டு வாயைப் பிளந்து குழந்தைக்குப் பாலையும் ஆமணக்கு நெய்யையும் அருந்துகின்ற தாய்க்கு ஒப்பாவார்கள்.

நாம் மற்றவர்களை அறம் செய்ய வற்புறுத்தக் கூடாது. அறம் செய்யும் பழக்கம் தானுகவே எழ வேண்டும். ஒருவித நிர்ப்பந்தத்தாலோ கட்டளையாலோ நிறைவேற்றக் கூடியதல்ல அறம் செய்தல்!

தாமாகவே முன்வந்து அறம் செய்வோர் குற்றமற்ற குணம் உடையோர், குன்றனைய புகழ் பெறுவர். அவர்கள் துன்பம் அடைந்த போதும் தளர்ச்சியடைய மாட்டார்கள்.

அவர்கட்குப் பொறுமை அதிகம்.

பொறுமை யுடையவர்கள் வாழ்வில் எந்தத் தளர்ச்சி ஏற்பட்டாலும் அதை ஏற்க அவர்கட்கு நல்ல சக்தி இருக்கும். சக்தியற்றவர்கள் கோழைகளாக—கோபம் உடையவர்களாகத் திகழ்வர்.

அவர்கள் தம்மை வெறுப்பவர்களிடத்தும் அன்பு கொள்வர். தம்மை வெறுப்பவர்களிடம் வேற்றுமை கொள்ள மாட்டார்கள்.

வெறுப்படையாத வாழ்க்கை உடையவர்கள் வெப்பத்தோடுகூடிய உணவையே புசிக்க விரும்புவர். உலக வாழ்க்கைக்கு உரியவைகளுள் இதுவும் ஒன்றாகும். மிக்க வருமானத்தோடு நடுவு நிலைமை தவறாமல் இருப்பதே உத்தியோகமாகும்.

உத்தியோகச் சிறப்பு

உத்தியோகம் என்பது புருஷ லட்சணமாக இருந்தாலும் அது நடுவு நிலைமை தவறி — ஒரு பக்கம் சார்ந்து, பொய் கூறி, புறங்கூறி, கையூட்டு வாங்கி, பிறரை ஏமாற்றி, பிறர் பணம்பெற்று அதைத் திருப்பித்தர மனமில்லாத வாழ்க்கையாக இருத்தல் கூடாது.

தம்மை மற்றவர்கள் நினைத்து வாழ்வதற்கேற்ற ஈகைக் குணத்தோடு வாழ்வதே வாழ்க்கையாகும்.

உலகில் பிறந்தவர் எல்லோரும் வாழ்ந்தவர்கள் ஆகி மாட்டார்கள்.

வாழ்க்கை என்பது ஆராய்ந்து தெளிதலாகிய கருமத்தை முடிக்கும் துணிவேயாகும்.

உலக வாழ்க்கை உறுதியான வாழ்க்கையல்ல. அது அழியும் தன்மையுடையது. இந்த வாழ்க்கை மாயம் நிறைந்த வாழ்க்கை. அது மட்டுமல்ல—பொய் யான வாழ்க்கையும் கூட!

பொய்மை வாழ்வு

இந்தப் பொய்மை வாழ்வில் நாம் பற்றுக்களை விடல் வேண்டும். அழிவில்லாத ஞானத்தை நம் முயற்சியால் அடைய முயற்சித்தல் வேண்டும். மனிதன் கூற்றினிடம் அகப்படும் பொழுது அவன் அனுபவிக்கும் துன்பம் மிகவும் கொடியதாகும்.

நம் பிறப்பு என்பது வியத்தகு செய்தியாகும். அதைப் போலவே பிறந்த உயிர் உலகப் பொருள்களை அனுபவிக்க முயல்வதும் வியத்தகு செய்தியாகும். உலகில் வாழும் உயிர்களை எமன் கவர்ந்து செல்வதும் வியத்தகு செய்தியாகும்.

அறநூல்களை நன்கு கற்றவர்கள் பிறப்பின் இழிவை அறிந்து போர்முனையை அடைந்த தளபதி யைப்போல் சோர்வில்லாமல் பிறப்பினை அறுக்க முயல்வர்.

மகாவீரரின் நற்சிந்தனைகளை நாம் திரும்பத் திரும்ப எண்ணிப் பார்த்தல் வேண்டும்.

நமது வாழ்க்கை பல்வகைகளில் சிறப்புற நாம் பிறரினும் மேன்மை பெற கவலைகளையும், துன்பங்களையும் விட்டொழிதல் வேண்டும்.

கவலையும் துன்பமும்

கவலையுடைய மனிதன் சோம்பி நிற்பான். அவனால் எந்தச் செயலையும், துரிதமாகவும், செம்மையாகவும் செய்ய முடியாது. தாம் மேற்கொண்ட செயலைச் செம்மையாகச் செய்ய இயலவில்லையேல் தமக்குத் துன்பமே நிகழும். கவலைகள் பெருகும்.

துன்பம் நமக்கு எதனால் ஏற்படுகிறது என்பதை நாம் சற்றுச் சிந்தித்தல் வேண்டும். துன்பம் இயற்கையின் விளைவு. அதை நாம் நம் அறிவின் சக்தியால் போக்க முயற்சித்தல் வேண்டும்.

சில தீய சக்திகளால் — நாம் நேர்மையற்றுச் செய்யும் செயல்களால் நமக்குத் துன்பம் உண்டாகும். பிறருக்கு நாம் கொடுமைசெய்து அவர்களுக்குத் துன்பம் உண்டாக்கினால் விரைவில் அத்துன்பம் நமக்கே ஏற்படும்.

நாம் எப்பொழுதும் மற்றவர்களுக்கு நல்லதையே செய்ய முற்படல் வேண்டும். நோயின் கொடுமை

யாலும் சமூகத்தில் தீயவர் தீயவர் சிலர் இழைக்கும் கொடுமையாலும் பாதிக்கப் படுபவர்களுக்கு நாம் துணைபுரிதல் வேண்டும்.

கவலைகளையும், துன்பங்களையும் போக்கும் பொழுது நமக்குப் புதிய சக்தி தோன்றும். புத்துணர்ச்சி உண்டாகும்.

நாம் அப்பொழுது பொய்யைத் தவிர்ப்போம்.

புறங்கூறுதலை விட்டுவிடுவோம்.

பொய்யும் புறங்கூறுதலும்

ஒரு மனிதனைக் கொல்லாமல் கொல்லுதலும் புறங் கூறுதலும், பொய்யுமேயாகும். பொய்யுடைய மனிதன் எத்தனை மெய்யான செயல்களைச் செய்யப் பெரிதும் பாடுபட்டாலும் அவனால் அச்செயலைச் செம்மையாகச் செய்ய முடியாது.

செம்மையான, செயல்களைச் செய்வோர் உண்மையின் காவலர்களே!

உண்மைக்கு மாறுபட்டு அவர்கள் எதனையும் எப் பொழுதும் செய்ய விரும்ப மாட்டார்கள்.

புறங்கூறுவோர் பொய்மை வாழ்க்கை வாழ் பவர்கள் ஆவர். புறங்கூறுவதால் ஏற்படும் அற்ப மகிழ்ச்சியும் சுயநல நோக்கும் எப்பொழுதும் நீடிக்கக் கூடியவை அல்ல!

புறக்கூறுத வாழ்க்கை வாழ்வோர் சிறந்த சான்றோர்களாகத் திகழ்வர்.

ஊன் உணவும் உயிர்க் கொலேயும்

சான்ருேர்கள் நாவின் சுவைக்கு அடிமையாக மாட்டார்கள். அவர்கள் ஊன் உணவைக் கைவிடுவர். ஊன் உணவை உட்கொள்வோர் உடல் ஊட்டத்திற் காக உட்கொள்கிருேம் என்பது பொய்யான வார்த்தை யாகும்.

உயிர்க் கொலே செய்வதும் பாவமே!

பிற உயிர்களேக் கொல்வதும், கொன்ற உயிர்களே உண்பதும் எப்படிச் சிறந்ததாகும்.

உயிர்க் கொலே இரக்கமற்ற தன்மையே ஆகும். இரக்கம் இல்லாதவர் நெஞ்சிலே அன்பு எங்கிருந்து சுரக்கும்? அன்பற்றவர் வாழ்விலே அகந்தையும், பிறர்மீது அனுதாபம் கொள்ளாத தன்மையுமே இருக்கும்.

தானமும் அன்பும்

அன்புடைய நெஞ்சிலேதான் உயிரைப் பாது காக்க வேண்டும் என்ற உணர்வு ஏற்படும்.

அன்புடையார் எல்லாம் உடையார் அவர் எலும் பும் பிறருக்கு உரிமையானது என்பது இதனால்தான் கூறப்பட்டது போலும்.

அன்புடையவர்கள் என்றும் பிறருக்காக வாழ் பவர்கள். அவர்கள் தானங்கள் செய்பவர்கள். தவ நெறி மேற்கொள்வார்கள்.

தானமற்ற வாழ்க்கையும், தூய தவநெறியற்ற வாழ்க்கையும் சிறப்புடைய வாழ்க்கையாக அமையாது.

தானம் புரிவோர் என்றும் கெடுவது இல்லை.

தங்களால் இயன்ற அளவு தானம் செய்யலாம். தானம் செய் என்று நம்மையாரும் கட்டாயப் படுத்தவில்லை. அது நம் மனத்தைப் பொறுத்தது. தானம் செய்பவரைச் சுற்றி இல்லாமையால் துன்பம் உறுவோர் பலர் இன்று வாழ்கின்றனர்.

பசி அவர்களைக் கொல்கிறது.

நோய் அவர்களைத் துன்புறுத்துகிறது.

நாம் செய்யும் தானம் நம்மை என்றும் வாழ்வில் உயர்த்தும். மணற்கேணி தோண்டத் தோண்ட சுரக்கும் என்பர்.

நமக்குச் செல்வம் பெருகும். வாழ்வில் பல வளங்களும் கூடும். அப்போது நாம் தானம் செய்யத் தயங்கக் கூடாது.

தவநெறி மேற்கொள்வோர் அருட் செல்வர்கள். அவர்கள் கவலைகளையும் துன்பங்களையும் பொருட்படுத்தாதவர்கள்.

பொய்யும் புறங்கூறுதலும் அவர்கட்கு வேண்டாதவைகள்.

தவநெறி மேற்கொள்வோர் உயர்ந்த நல்வழிகளை மேற்கொள்பவர்களே ஆவர். அவர்கள் செய்நன்றியை மறக்க மாட்டார்கள். எதை மறந்தாலும் மறக்கலாம். ஆனால் செய்நன்றியை மறப்பது என்பது கூடாது.

செய்நன்றியின் சிறப்பு

செய்நன்றி மறந்தோர் பிறர் நலம் பேண மாட்டார்கள். அவர்கள் சுயநலவாதிகளாகத் சுற்றித் திரிவர். எதையும் தனக்கு, தனக்கு எனக்கூறி இன்பவாழ்க்கை வாழ முற்படுவர்.

அவர்கள் அனுபவிக்க விரும்பும் சுகத்திலும், ஒரு நிம்மதியும், நிறைவும் இருக்காது.

நிம்மதியற்ற வாழ்க்கை எதற்கு?

பூந்தோட்டம் வைப்பவன் பூப்பறிக்கத்தானே ஆசைப்படுவான்? பூந்தோட்டத்தை வைத்துவிட்டு மலர்களின் மணத்தையும் அழகையும் அனுபவியாமல் கண்மூடியாக ரசனையற்றவனாகத் திரிவானா?

செய்நன்றியை மறப்பவன் தீயவர்களை விரும்பி, அவர்கள் நட்பினைப் பெறுவான். தீயவர் நட்பினைப் பெறுபவன் உலகில் நல்லவனாக நடமாட முடியுமா?

தீயவர் நட்பு

தீயவர் நட்பினை நாம் ஒதுக்குதல் வேண்டும்.

தீயவர் நட்பால் அழிந்த குடும்பங்கள் — அவதி யுற்ற பெண்கள் எத்தனை எத்தனை பேர்! தீயவர் நட்பால் தீய்ந்தோர் எத்தனை எத்தனை பேர்!

தீயவர்கள் தீய்ந்த நெருப்புக் கட்டையைப் போன்றவர்கள். அவர்கள் அறிவால் உலகில் ஆகப் போவது ஒன்றுமில்லை.

தீயவர்கள் சுக புருடர்கள்! பிறர் உழைப்பைச் சுரண்டுபவர்கள். உல்லாசம் அவர்கட்குத் தங்கத் தேர்! அந்தத் தேரின் வடத்தை இழுக்கும் பொழுதும் அவர்கள் அந்த வடம் இழுப்பதால் எந்த நன்மை யாகிலும் கிடைக்காதா என ஏங்குவார்கள்!

பொய்ச் சான்றின் இழிவு

தீய நட்புடையோர் பொய்ச் சான்று சொல்வர். பொருள் பொதிந்த மெய்யுரைகளை விட்டு நீங்குவர்.

அவர்கள் கூறும் பொய்ச் சான்று அவர்களுக்கு அற்ப மகிழ்ச்சியையும் சிறிது நேர இன்பத்தையும் தரும். ஆனால், அதனால் ஏற்படும் தீங்கை அவர்கள் எண்ணிப் பார்ப்பதில்லை. எண்ணிப் பார்க்கவும் அவர் களால் இயலாது.

பொய்ச் சான்று கூறுபவர்கள் பாம்புப் புற்றில் கை வைப்பவர்களைப் போன்றவர்கள்! அவர்களுக்கு யாரிடம் எதைச் சொல்கிறோம் என்பது தெரியாது.

பொய்ச்சான்று கூறுவோர் பொருள் பொதிந்த மெய்யுரைகளைவிட்டு நீங்குவர் என்றோம். மெய்யுரைகளைக் கூறுபவர்களே மேதினியில் இன்பம் அடைவர்.

மெய்யுரை கூறுபவர்களை உலகம் மதிக்கும்.

ஆலமர நிழலும் அறவோர்களும்

உலகம் மதிப்பது அறவோர்களையே! அறவோரின் சபையிலே நாம் நீங்காது சேர்ந்திருத்தல் வேண்டும். அறவோர் சபை என்பது குளிர்ச்சியான ஆலமர நிழலில் அமர்ந்து இன்பம் காண்பதைப்போல!

அறவோரின் சபையை விட்டு நாம் நீங்கினுல் நமக்கு நன்மைகள் ஏற்படாது. தீமைகளே உண்டாகும்!

அறவோர்கள் தீயவர்களைத் தம் சபையில் சேர்க்க மாட்டார்கள். தீயவர்கள் கூட்டத்தில் நாம் சேராமல் வாழுகின்ற வாழ்க்கையே வளமான வாழ்க்கை!

தீயவர்கள் பிறர் மனைவியை விரும்புவர்.

பிறர் மனைவியை விரும்புவதை அஞ்சி ஒதுக்கல் வேண்டும்.

அஞ்சுகின்ற வாழ்க்கையே அமைதியைத் தரும் வாழ்க்கையாகும்.

நாம் செய்யும் செயல்கள் சிறப்புற மேன்மைபெற நாம் அன்பு, அச்சம், அடக்கம், ஆண்மை, அறிவுடைமை ஆகியவைகளை மேற் கொள்ளல் வேண்டும்.

இப்படிச் செய்யும் பொழுது துன்பமுற்ற உயிர்களைக் காத்துப் பாதுகாக்கும் குணம் நமக்கு ஏற்படும்.

துன்பமுற்ற உயிர்களை—வாயில்லா ஜீவன்களைப் பாதுகாத்தல் என்பது பெரும் நற்குணங்களுள் ஒன்ருகும். நாம் செய்யும் நன்மைகளுள் மகத்தானது துன்பமுற்ற உயிர்களைப் பாதுகாக்கும் குணமேயாகும். எத்தனையோ வாயில்லா ஜீவன்கள் குடிக்க நீரின்றி தவிக்கும் காட்சி நம் மனத்தை நெகிழ்விக்கும் செயல்களுள் ஒன்ருகும்.

கள்ளின் தீமை

கள்ளுண்ணுதலும் — களவாட எண்ணுதலும் — காமம் கொள்ளுதலும் — பொய் கூறுதலும் — பயனில பேசும் கூட்டத்தையும் திறமையுடன் கைவிட்டு விடுதல் வேண்டும்.

கள்ளுண்டு மகிழ்வோம் என அற்ப சுகம் காணத் துடிப்பது பேதமை. பணமும் நட்பும் கள்ளுக்காக வரலாம். ஆனல் ஆரோக்கியமும் கௌரமும் எத்தனைப் பணம் செலவழித்தாலும் வராதே!

கள் என்பது பல குடும்பங்களை அழிக்கும் முள்! கள் என்பது பல தாய்மார்களின் மாங்கல்யத்தையும் அறுக்கும் கத்தி!

கள்ளால் பெண்கள் சிந்தும் கண்ணீர் எவ்வளவு?

மதுவால் மனிதன் தீயவன் ஆகலாம்.

ஆனால் குடும்ப விளக்கேற்றி குதூகலமுடன் வாழும் பெண்கள் அந்த மதுவால் — கணவனின் அன்பை இழந்து காலமெல்லாம் கண்களிலே நீரெ தற்கு எனக் கேட்டு அழவேண்டுமா?

'கள்ளே நீ ஒழி — காலமெல்லாம் என் குடும்பத்தையும் குழந்தைகளையும் வாழவிடு' எனக் கண்களிலே கண்ணீரோடு அழுது புலம்பி நிற்கும் தாய்மார்கள் எத்தனைபேர்!

கள்ளால் களவாடத் தோன்றும். காமம் பெருகும். கள்ளால் பொய் கூறத் தோன்றும். கள்ளால் பயனில்லாத சொற்களைப் பேசும் கூட்டத்தைச் சேர்ந்து நிற்க வேண்டிய நிலைமை ஏற்படும்.

கள் என்பது காட்டாற்று வெள்ளம் போல!

அது பல குடும்பங்களை அழிக்க வல்லது!

எனவே கள்ளை நாம் நீக்கும் பொழுது களவு நம்மை விட்டுப் போகும். காமம் பெருகாது. பிறர் மனைவியை நாம் ஏறிட்டும் பார்க்க மாட்டோம்.

பேரறிவு படைத்தவர்களாக நிற்போம்!

இளமையும், யாக்கையும், செல்வமும் நிலைத்து நிற்கக் கூடியவை அல்ல. அவைகள் அழியக் கூடியவைகள்.

அறம் புரிக

இளமையில் நாம் புகழுடம்பு எய்த அறம் புரிய வேண்டும். முதுமையில் செய்து கொள்ளலாம் என அறத்திற்கு முற்றுப் புள்ளி வைக்கக் கூடாது. இளமையில் நாம் ஈட்டும் செல்வம் நம் வாழ்வை வசதியாகப் பெருக்கிக் கொள்ள மட்டுமல்ல! அறம் புரிவதற்குமேயாகும்!

அறத்தால் வருவதே இன்பம்.

யாக்கையை வைத்துத் தீயவழியில் பொருளீட்டும் பெண்கள் பேதைகளே! அவர்கள் செல்வம் அழியும். அவர்கள் நோயால் நலிந்து இன்பம் இழந்து இழிநிலை பெற்று ஒருநாள் அழிவர்.

இவ்வுலகில் நிலைத்து நிற்கக் கூடியது நாம் செய்யும்அறம் ஒன்றே!

உள்ள வாழ்நாட்கள் சென்று கழிய விட்டுவிடக் கூடாது. சாவு வருவது தப்பாது!

வாழ்நாட்கள் காலையில் மலர்ந்து மாலையில் உதிரும் மலரைப் போல! அவைகள் உதிர்ந்து கொண்டே இருக்கும்.

நாள்காட்டித் தாளை நாம் நாள்தோறும் கிழிக்கின்ருேமே தவிர திரும்பத் திரும்ப ஒட்டுவதில்லை. புதிய மலர்களைப் பறிக்க நாம் கைநீட்டுகின்ருேமே தவிர வாடிய—உதிர்ந்த மலர்களை அள்ள நாம் நம் கரங்களை நீட்டுவதில்லை.

வளமிக்கப் பேருலகில் வாழ்கின்றவரே! எல்லாவற்றையும் இவ்வுலகிலேயே இயற்றி உயருங்கள்!

உண்மையும் அதுவே!

வளம் மிக்கப் இவ்வுலகில் நாம் கவலைகளையும் துன்பங்களையும் கொண்டு வாழக் கூடாது.

இன்பமுடன் வாழ்ந்து இம்மண்ணுலகுக்குச் செய்ய வேண்டிய நல்ல செயல்களைச் செய்ய வேண்டும்.

பொன்னும் பொருளும் பெரிதல்ல!

மண்ணும் விண்ணும் புகழ, அறம் புரிக!

அறமே உயர்வு! அறமே வாழ்வு! அறமே இன்பம்!

இந்தக் கருத்துகளை இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் 'வரந்தருகாதை'யில் மிகவும் சிறப்பாக கீழ்வரும் பாடலால் குறிக்கின்ருர்.

பரிவும் இடுக்கணும், பாங்குற நீங்குமின்;

தெய்வம் தெளிமின்; தெளிந்தோர் பேணுமின்;

பொய்யுரை அஞ்சுமின்; புறஞ்சொல் போற்று மின்;

ஊனுண் துறமின்; உயிர்க்கொலை நீங்குமின்;
தானம் செய்மின்; தவம்பல தாங்குமின்;
செய்நன்றி கொல்லன்மின்; தீநட்பு இகழ்மின்;
பொய்க்கரி போகன்மின்; பொருள்மொழி
நீங்கன்மின்;
அறவோர் அவைக் களம் அகலாது அணுகுமின்;
பிறவோர் அவைக் களம் பிழைத்துப் பெயர்மின்;
பிறர்மனை அஞ்சுமின்; பிழையுயிர் ஓம்புமின்;
அறமனை காமின்; அல்லவை கடிமின்
கள்ளும், களவும், காமமும், பொய்யும்
வெள்ளைக் கோட்டியும் விரகினின் ஒழிமின்;
இளமையும் செல்வமும் யாக்கையும் நிலையா
உளநாள் வரையாது; ஒல்லுவது ஒழியாது;
செல்லும் தோத்துக்கு உறுதுணை தேடுமின்
மல்லன்மா ஞாலத்து வாழ்வீர் ஈங்கென்.

— இந்தப் பாடலுள் சமணக் கருத்துகள் யாவற்றயும் 'சிலப்பதிக்காரத்துள்' ஒன்று திரட்டித் தந்துள்ளார் இளங்கோவடிகள்.

மகாவீரரின் பாதையைப் பின்பற்றுவோர் இத் தகைய நற்சிந்தனைகளை மனத்துள் கொள்ளுதல் மிகவும் சிறப்பாகும்.

“மக்கள் பலரும் தங்கள் ஆன்மாவின் ஆற்றலை அறிந்து இந்தப் பிறவித் துன்பத்தினின்றும் நீங்கிப் பிறவாமையாகிய வீடு பேற்றை அடைய வேண்டும் என்ற பரந்த நோக்கங் கொண்டு சைன ஆன்றோர்கள் மக்களுக்குப் பல அறநெறிகளை வகுத்தளித்தனர்” என்கிறார் ஜீவபந்து டி. எஸ். ஸ்ரீபால் அவர்கள்.

பிறவித் துன்பம் நீங்கிப் பிறவாமையாகிய வீடு பேற்றை அடையப் பலரும் விரும்புவர்.

நல்லொழுக்கத்தாலும் தூய தவத்தினாலும் மக்கள் பலரும் அறிவும் பண்பும் பெற்று உயர்ந்து வினையின் நீங்கி வீடு பேற்றினை அடையலாம் என்னும் ஆன்மீகக் கலையைச் சமண அறவோர் உலகுக்கு வழங்கினர் என்பர்.

அத்துடன் மட்டுமல்ல!

தம்முடைய சொந்த முயற்சியாலும் ஒழுக்கத் தாலுமே உயர்வடைய வேண்டும் என்பதைத் தெளிவாக்கினர்.